# அகிலம்

(திங்கள் வெளியீடு)


| மலர் : 1 | ஆகஸ்ட் – செப்டம்பர் 1994 | இதழ் : 3 , 4 |
| --- | --- | --- |


## சாகித்திய விழா





1994

பதுளை

கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

அகிலத்தில் ‘ அகிலம் ’ சிறந்த
அறிவியல் சஞ்சிகையாக வெளிவர
எமது நல்லாசிகள்



★

# STAR JEWELLERS

*GENUINE 22 CT. GOLD JEWELLERS.*

90, SEA STREET,

COLOMBO - 11

☎ 01 – 329727

# அகிலம்

(திங்கள் வெளியீடு)

கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

மலர் 1 | ஆகஸ்ட் – செப்டம்பர் 1994 | இதழ் 3 – 4

## உள்ளே ....

| | | |
|---|---|---|
| வாழ்த்தும் இதயம் இங்கே உதயம் | Dr. V. நடேசன் | 4 |
| ஊவா மாகாண சாகித்திய விழா | ஆசிரியர் | 5 |
| திருக்குறள் | | |
| நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் | திருமதி. ஞானம் ஞானசேகரஐயர் | 9 |
| நம்ம ஊர்! | பண்டாரவளை அன்புச்செல்வன் | 11 |
| பண்ணும் இராகமும் | மானியூர் சி. குமாரசாமி | 12 |
| தமிழில் மகளிர் இலக்கிய வளர்ச்சி | திருமதி. லலிதா நடராஜா | 15 |
| மாம்பழம் | பதுளை ராமு | 19 |
| கடிதம் | அக்குறணை ஹரீரா அனஸ் | 21 |
| கைப்பிடிக்குள் சூரியன்......... | சு. முரளிதரன் | 25 |
| அகிலமெங்கும் அகமகிழ்ந்து...... | ஞா. கிருஷாந்தி | 28 |
| செய்யுளுக்கு பொருள் எழுதும் முறை | K. சந்திரிகா | 29 |
| உணவுச் சத்துக்களிலிருந்து...... | இரா. சிவகணேசன் | 32 |
| குறைவிருத்தியும் பரிமாணங்களும் | எம். எஸ். மூக்கையா | 33 |
| புவியின் உட்பாகமும் பௌதிக...... | வை. நந்தகுமார் | 37 |
| தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி...... | சத்தியமணி | 40 |
| வாசகர் நெஞ்சங்களிலிருந்து | | 41 |
| அகிலாவின் கேள்வி பதில் | | 43 |

**அட்டைப்பட விளக்கம்.........**

★ திரு. எம். ஜோதிராஜ் ★ திரு. இரா. சிவகணேசன், ★ திரு. விஜயச்சந்திரன் ★ திருமதி ஆர். சோபனாதேவி, ★ திரு. எம். எஸ். மூக்கையா ★ திரு. சோ. சந்திரசேகரன் ★ திரு. க. இராமசாமி ★ கலைமாமணி டி. எம். சௌந்தரராஜன் அவரது புதல்வர் பால்ராஜ் ஆகியோருடன் அகிலம் ஆசிரியர்.

**ஆசிரியர்: கே. வி. இராமசாமி**

இச் சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

**விலை ரூபா. 20.00**

தொடர்பு:-

**அகிலம் பப்ளிகேஷன்ஸ்,**

98, டீ. எஸ். சேனாநாயக்க வீதி,

கண்டி.

# ஊவா மாகாண சாகித்திய விழாவும்

## மாண்புமிகு அமைச்சர் சச்சிதானந்தன் அவர்களும்...

மலையகத்தில் இலக்கிய மணம் பரப்பி இதயங்களில் என்றும் சுடர்விடும் மாகாணம் ஊவா மாகாணம் என்பதை யாவரும் அறிவர். சிறந்த எழுத்தாளர்களையும், கலைஞர்களையும், கவிஞர்களையும், சமூக சிந்தனையாளர்களையும் உருவாக்கிய இம்மண்ணில், பதுளையில் 22, 23, 24 - 7 - 94 ஆந் திகதிகளில் இந்து சமய கலாசார அமைச்சும், ஊவா மாகாண இந்து கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சும் இணைந்து நடாத்திய தமிழ் சாகித்திய விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டமை பெருமைக்குரியது.

அடிக்கடி இலக்கிய விழாக்களும் இளைஞர் சந்திப்பும், கலைவிழாக்களும், நாடக விழாக்களுமாக சோபித்திருந்த பதுளை மாநகர் சமீப காலமாக சோம்பி சோர்ந்து போய் விட்டது. இதனை உணர்ந்த இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள், ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சர் திரு. எம். சச்சிதானந்தன் அவர்களை தூண்டி விட்டுள்ளதோடு, உறங்கிக் கிடந்த பதுளை நகரையும் தட்டி எழுப்பி விட்டாரென்றே கூறத்தோன்றுகின்றது.

இவ்விழாவின் மூலம் அமைச்சர் சச்சிதானந்தன் அவர்கள் தனக்கென அடித்தளம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார், என்பதில் ஐயமில்லை. பண்டாரவளையில் முதல் பிராந்திய சாகித்திய விழாவை விமரிசையாகக் கொண்டாடிய அமைச்சர், சச்சிதானந்தன் அவர்கள், விடா முயற்சியுடன் இந்த ஊவா மாகாண சாகித்திய விழாவையும் கொண்டாட பொறுப்பேற்றுக் கொண்டமை அவரது துடிப்புமிகு சேவையையும் ஆர்வத்தையும் பறை சாற்றுகின்றது. அத்தோடு அடுத்த சாகித்திய விழாவை அப்புத்தளையில் நடத்துவேன் என சூளுரைத்திருப்பது அவரது மனவுறுதியைக் காட்டுகின்றது. விழா ஏற்பாடுகளை மூத்த கவிஞரும், எழுத்தாளருமான தமிழோவியன் அவர்களும், திரு. வை. நடன சபாபதி திரு. பாலசுப்பிரமணியம் என்போரும் திறம்பட செய்திருந்தனர்.

மாண்புமிகு உல்லாச கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சௌ. தொண்டமான் அவர்கள் விழாவில் நடுநாயகமாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அறிஞர்கள், வளரும் கலைஞர்கள், கல்வித்துறை சார்ந்தோர், பத்திரிகைத் துறையினர், இசைத்துறை, விளையாட்டுத்துறை. கலைஞர்கள் யாவரும் பாராட்டப்பட்டார்கள். இவர்களுள் பாரதி கல்லூரியின் ஸ்தாபக அதிபர். திரு. க. இராமசாமி குறிப்பிடத்தக்கவராவார். பதுளையில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் பாரதி இராமசாமி முன்னோடி என்றே குறிப்பிட வேண்டும்.

இந்த விழாவில் ''அகிலம்'' ஆசிரியர் என்ற வகையில் என் பிறந்த மண்ணில் வைத்து என்னைப் பாராட்டியமையைப் பெறும் பேராகக் கருதுகின்றேன். கண்டியில் நடைபெற்ற 'அகிலம்' வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் சச்சிதானந்தன் அவர்கள் ஊவா மாகாணத்தில் 'அகிலம்' சஞ்சிகையை அறிமுகம் செய்து, அதன் வளர்ச்சிக்கு உதவுவதாக அளித்த உறுதி மொழியை மறவாது, சொன்ன சொல்

தவறாது தமது சிறப்பு விழாவான சாகித்திய விழாவிலே அகிலத்தை அறிமுகப்படுத்தி என்னை கௌரவித்தமையை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். அகிலம் என்றென்றும் அமைச்சரின் அரும் பணியை கௌரவித்துக் கொண்டேயிருக்கும். அமைச்சர் அவர்களின் கலையுணர்வும், பரந்த சமூகத் தொண்டும் ஊவா மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக கொள்வோமாக!

பல்வேறு சிறப்புக்களுடன் சாகித்திய விழா நிகழ்ந்தேறிய பதுளைப்பகுதி தேயிலைத் தோட்டங்கள் நாளுக்கு நாள் பசுமையிழந்து வருவதையும், அங்கு தொழில் புரியும் மக்கள் வாட்ட முற்றிருப்பதையும் காண கவலையே ஏற்படுகின்றது. இலக்கியம் பற்றி பேசும் நாம் இதனைப் பற்றியும் நினைத்துப் பாராமல் இருக்க முடியாது. தேயிலைச் செடிகள் காய்ந்து, கருகி, கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் 'பொட்டல்' ஆக காட்சியளிப்பது கவலையளிக்கின்றது. நமது வாழ்வும், வளமும் இத் தேயிலைச் செடியிலிருந்து ஆரம்பமாகினாலும் முப்பது ஆண்டுகளைப் பின்னோக்கிப் பார்க்கும் போது எதிர்காலத்தில் நம் மக்களது நிலைமையை கேள்விக் குறியாகிவிடும் என்பதையே இந்நிலை தோற்றுவிக்கின்றது. மலையகத்தின் பால் அக்கறையுள்ளவர்கள், மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் 2000 நூற்றாண்டை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலும் கூட மலையகத்தின் கல்வித்தரம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லையே என்ற ஆதங்கம் பரவலாக எடுத்து கொண்டிருப்பதையும் நாம் அசட்டை செய்துவிட முடியாது. வேதனைக்குள்ளாகியுள்ள வடகிழக்கு மாணவர்கள் 'சோதனைகள்' யாவற்றிலும் தேர்ச்சி பெறும் போது நம் மாணவர்கள் எங்கே நின்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை நம் ஆசிரியர்கள், பெற்றார்கள், சமூக நலன் விரும்பிகள் சிந்தனை செய்து பார்ப்பது அவசியமானது என்பதை சொல்லியே ஆக வேண்டியுள்ளது.

- ஆசிரியர்

## உங்கள் முன் சில வார்த்தைகள்.....

'அகிலம்' ஆகஸ்ட் - செப்டம்பர் இதழ்களை வெளிக்கொணர எடுத்த முயற்சிகள் பல்வேறு தடைகளாலும் நாட்டில் அவ்வப்போது எழுந்த சூழ்நிலைகளாலும் முழுமை பெறாமல் போய்விட்டன. என்றாலும் நாம் எமது ஆர்வத்தில், பயணத்தில் தளர்ந்து விட வில்லை. அனைத்தையும் பொறுமையோடு சமாளித்து விட்டோம் என்பதை அன்பான வாசகர்களுக்கு தெரிவிப்பதோடு, இந்த இதழை மட்டும் ஆகஸ்ட் - செப்டம்பர் இதழாக வெளியிடுகின்றோம்; அக்டோபர் அகிலமும் அச்சில் இருக்கின்றது அதுவும் விரைவில் வெளிவந்து விடும்; இனி என்ன? தொடர்ந்தும் அகிலம் தங்கு தடையின்றி வெளிவரும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகிலத்தின் பால் அக்கறை கொண்டு அஞ்சல் எழுதிய அத்தனை பேருக்கும் எம் நன்றிகள்.

இந்த இரட்டை இதழில் புதிய அம்சங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. சில புதிய அம்சங்களை எதிர்வரும் இதழ்களில் சேர்ப்பதற்கு எண்ணியுள்ளோம்.

— ஆசிரியர்

கடல் கடந்த வாழ்த்துக்கள்

# வாழ்த்தும் இதயம்
# இங்கே உதயம்

உலகத்தில் பூமி உருண்டை என்பது உண்மையானால்
அதில் கடல் இருப்பது உண்மையானால்
அதில் காற்று மண்டலம் இருப்பது உண்மையானால்
அதில் மழை பெய்வது உண்மையானால்,

அதில் உயிரினங்கள் கடவுளால் படைக்கப்பட்டது உண்மையானால்
அதில் மனித இனங்கள் பரந்து வாழ்வது உண்மையானால்
உலகத்தில் பல மொழிகள் பேசுவது உண்மையானால்
அனைத்துக்கும் ஒரு சிறப்பான மொழி இருக்குமேயானால்,

அதுதான் உண்மையான தங்கத்தமிழ் என்பதை உலகறியச்
செய்யும் உங்களின் சிறப்புமிக்க ''அகிலம்'' என்ற தமிழ்
சஞ்சிகை சிறப்பான முறையில் செய்திகளை வெளியிட்டு
தமிழினத்தின், பண்டைக்கால சிறப்புமிக்க வரலாற்றை

அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்டி நமது பெருமைமிக்க
வரலாற்றை உங்களின் ''அகிலம்'' மாத இதழில்
மூலமாக வெளியிடவேண்டும் என வாழ்த்துகிறோம்.

எழில் கொஞ்சும் இலங்காபுரியில் மலையகத் தலைநகர்
கண்டியில் இருந்து வெளியிடப்படும் ''அகிலம்'' சஞ்சிகை
உலகத்தில் உள்ள தமிழர்கள் தமிழ்பேசும், மக்களனைவருக்கும்
போய்ச் சேர வேண்டும் என மனமார வாழ்த்துகிறோம்.

குன்னூர், தமிழ் நாடு.

**Dr. V. நடேசன் குடும்பத்தினர்**

## ஊவா மாகாணத் தமிழர்களின்
## கலை இயல் உயர்விற்கு வித்திட்ட
# ★ சாகித்திய விழா! ★

கடந்த மாதம் 22-7-94ல் பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரியில், இந்து சமய கலாசார அமைச்சின் (ஊவா மாகாண) செயலாளர் திரு. W. பிரேமதாசாவும், மாநகரம் துணை முதல்வர் திரு. S. சந்திரமோகனும் மரபுப்படி விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள். கலாசார அலுவலர் திரு. செ. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. வி. நடனசபாபதி (அமைச்சின் உதவிச் செயலாளர்) கோட்டக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி, மாகாண சபைக் கல்வி அலுவலகத்தைச் சார்ந்த திரு. தேவேந்திரன், அமைச்சின் கலாசார அலுவலர் திரு. செ. பாலசுப்பிரமணியம், கவிஞர் தமிழோவியன் ஆகியோரும் விளக்கின் சுடர்களை ஏற்றினார்கள். திரு. நடனசபாபதி அவர்கள தலைமை ஏற்று விழாவை நடாத்தினார்.

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்தும், சாகித்திய விழாக் கீதமும் இடம் பெற்றபின், "தமிழ் நாடகமும் அரங்கியல் மரபும்" என்பதை அடியொட்டி நடந்த ஆய்வரங்கில், "ஊவாவின் நாடக வரலாறும், இன்றைய நிலையும்" என்பதைப் பற்றி, கவிஞர் தமிழோவியன் கட்டுரை சமர்ப்பித்தார். பல முக்கிய தகவல்களையும் தந்தார். "மாகாண மட்டத்தில் நாடகக் கலையை ஊக்குவிப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை" என்பதைப் பற்றி பதுளை சார்ணியா த. ம. வித்தியால அதிபர் ஏ. தேவராஜ் அவர்கள் கட்டுரையை வாசிக்கும் போது, பல வரவேற்கத்தக்க ஆலோசனைகளை முன்மொழிந்தார். "மலையக நாடகத்தில் பபூனின் பங்கு" எனும் அருமையான - நகைச்சுவை செறிந்த - அனுபவம் மிக்க செய்திகள் அடங்கிய கட்டுரையைச் சுவையாகப் படித்தார் மலையக சிறுகதை எழுத்தாளர் திரு. மு. சிவலிங்கம் அவர்கள்.

வெண்புறாக் கலாலயம் அளித்த இசை, நடன நிகழ்ச்சிகள் அவையோர்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியது.

பிற்பகல் நடந்த சிறப்புக் கவியரங்கில் பாவரசி - கவிமணி நீலா - பாலன் தலைமையில் "இன்னும் ஒரு பத்தாண்டில் என்ன செய்யப் போகிறாய்?" எனும் தலைப்பில் கவிஞர்கள் நா. இளங்கோவன், பசறையூர் க. வேலாயுதம், எஸ். மகாலிங்கம், இரத்தினசாமி, திருமதி. சாந்திமோகன், செல்வி. ந. தாரணி ஆகியோர் மிகவும் சுவையாகக் கவிபாடி அவையோரைப் பரவசப் படுத்தினார்கள். அரங்கத் தலைவர் கவிஞர் நீலா பாலனின் கவிஞர்கள் அறிமுகமும் - முடிவுரையும் தலைமைக் கவிதைகளும் பாராட்டுகளையும். கைதட்டலையும் பரிசாகப் பெற்றன.

முன்னாள் கண்டிச் சேவையின் அறிவிப்பாளர் திரு. சிவம் கமலநாதன் இரு நிகழ்ச்சிகளையும் சுவையோடு தொகுத்தளித்தார்.

பதுளை 'சுப்பர் சன்ஸ்" இசைக் குழுவினர் வழங்கிய இசைவிருந்தோடு முதல் நாள் விழா நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

விழாவின் இரண்டாம் நாள் (2-7-94 நிகழ்ச்சி நாடக விழாவாகவே அமைந்திருந்தமை, இம்முறை சாகித்திய விழாவின் தொனிப் பொருளான "நாடகக் கலையும் அரங்கியல் மரபும்" என்பதை நினைவூட்டுவதாக இருந்தது.

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. எம். நகியா அவர்களும், ஊவா மாகாண சபை இந்து கலாசார அமைச்சின் செயலாளர் திரு. W. பிரேமதாச அவர்களும், பாரதி கல்லூரியின் நிறுவனர் பாரதி க. இராமசாமி அவர்களும், பதுளை பிரதேச சபைத் உப தலைவர் திரு. மாரிமுத்தும், சரஸ்வதி தேசிய கல்லூரியின் உதவி அதிபர் திரு. கே. சக்திவேல் அவர்களும், ஆசிரியர் திரு. ந. திருச்செல்வம் அவர்களும் மங்கள விளக்கேற்றி நாடக விழாவைத் தொடக்கி வைத்தார்கள்.

கலாசார அலுவலர் திரு. செ. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்த, அமைச்சின் செயலாளர் W. பிரேமதாச அவர்கள் ஆசியுரை வழங்கினார். இந்து சமய கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர், திரு. ஏ. எம். நகியா அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்துகையில் "தேசிய மட்டத்தில் கடந்த முறை சாகித்திய விழாவின் தொனிப் பொருளாக "நாட்டார் வழக்காற்றியலை" அறிமுகப் படுத்தி அதற்கொப்ப பல்வேறு நிலையில் பல நகரங்களில் எடுத்த சாகித்திய விழாக்களில் ஆய்வு செய்தோம். இந்த ஆய்வு முயற்சிகளினால் பலவகையிலும் பயன் தரத்தக்கத் தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். இறுதியாகத் தலைநகரில் நடந்த சாகித்திய விழா ஆய்வரங்கில் நமக்குத் தேடக் கிடைக்காத செல்வங்களை ஆய்வு அறிஞர்களின் வாயிலாக அறிய முடிந்தது.

இதன் தொகுப்புகள் அமைச்சினால் நாட்டார் வழக்காற்றியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அரிய வழிகாட்டியாகவும் ஆதார துணையாகவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் நம் சாகித்திய விழாவின் தொனிப் பொருளாக "நாடகக் கலையும் - அரங்கியல் மரபும்" என்பதை நாடளாவிய முறையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அமைச்சின் இத்திட்டத்தால் இந்த ஆண்டு சாகித்திய விழாவில் நாம், நாடகக் கலையைப் பற்றியும் பழைமைவாய்ந்த அரங்கியல் மரபை ஒட்டியும் பல அரிய உண்மைகளையும், கலை அம்சமான தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும் என்பது எங்களது நம்பிக்கையாகும்.

அந்த அடிப்படையில், ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழாக் குழுவினர் சிறப்பாக நடாத்தும் நாடக விழாவை நான் பாராட்டி, வரவேற்கின்றேன். ஊவாவில் வளர்ந்து வரும் சிறப்பான நடிப்பாற்றல் கொண்ட நாடகக் கலைஞர்களை பார்த்துப் பரவசத்தால் பூரித்து, அவர்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன். விழாவின் நோக்கமும், ஏற்பாட்டாளர்களின் விருப்பமும் கைகூட வாழ்த்துகின்றேன் என்று குறிப்பிட்டார்.

ஊவா மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடந்த நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்ற "உங்களிடமிருந்து" திறந்த நாடகப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்ற - லெஜார்வத்தை இளைஞர் கழகத்தின "நிஜங்கள்" சிறப்பு நாடகமாகச் சிறுவர்கள் - சிறுமியர்களினால் (ரொசட் த. வித்தியாலய மாணவ, மாணவிகளினால்) மேடை ஏற்றப்பட்ட "கண்ணகி வழக்கு" - எனும் நாடகங்கள் இரண்டாம் நாள் விழாவைச் சிறப்படையச் செய்தன. பதுளை மாவட்டத்திலுள்ள மாணவ - மாணவிகளின் வளர்ந்து வரும் கலைஞர்களின் அருமையான நடிப்புத் திறனை அவையோர்கள் பார்த்து மகி

ழும்படி நாடகங்கள் அமைந்திருந்தமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

கலைச் சுடர்கள் - ஜனாதிபதியின் பரிசுகளைப் பெற்றவர்கள். க. பாலேஸ்வரன் ஸ்ரீதர் குருதேவன் முதலியோர்களின் தனி நபர் நடிப்புகள் குறிப்பிடத் தக்க வகையில் இடம்பெற்றன.

வெண்புறாக் கலாலயத்தின் கலை, இசை நிகழ்ச்சிகளும், பதுளையில் புதிதாக உருவாகி வரும் இசைக் கலைஞர்களின் குழுவான "ஓஷான்ஸின் இசை அலைகள் இசை நிகழ்ச்சிகளும், விழாவின் சிறப்பிற்கு மகுடமாக விளங்கியது.

அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. வி. நடனசபாபதி நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

பாராட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரியில் 24-7-94 பிற்பகல் ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழாவின் இறுதி நிகழ்ச்சியான பாராட்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும், சிறப்பு விருந்தினர்களின் சொற்பொழிவும் இடம் பெற்றதோடு, சாகித்திய விழா மலரினை கவிஞர் தமிழோவியன் அறிமுகஞ் செய்து அமைச்சர் எம். சச்திதானந்தன் அவர்களிடம் கையளித்தார். அவர் அதனை அமைச்சர் தொண்டமானிடம் (முதல் மலரை) வழங்கி வெளியீட்டு நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கண்டியில் பிரபல சமூக சேவையாளராக விளங்குபவருமான திரு. கரு. வேலு. இராமசாமி அவர்களுக்குப் பாராட்டும், அவர் ஆசிரியராகப் பொருப்பேற்று வெளியிடும் "அகிலம்" மாத இதழின் அறிமுகமும் இடம்பெற்றது.

ஊவா மாகாண இந்து கலாசார பெருந்தோட்டப் பாடசாலைகள் தமிழ் மொழிக் கல்வி அமைச்சருமான திரு. எம். சச்சிதானந்தன் அவர்கள், 'அகிலம்' ஆசிரியர் திரு.க.வே. இராமசாமி அவர்களுக்கு மலர்மாலை அணிவித்துப் பாராட்டிவாழ்த்திட "அகிலம்" இரண்டாமிதழை ஆசிரியர் தலைவர் அமைச்சர் மாண்புமிகு சௌ. தொண்டமானிடம் வழங்கினார். அகிலத்தைப் பெற்றுக் கொண்ட தலைவர் தொண்டமான் அவர்கள் அதனை வெளியிட்டு வைத்து. ஆசிரியர் திரு. இராமசாமி அவர்களுக்கு நல்லாசி கூறினார்.

தமிழகத்திலிருந்து அமைச்சர் மாண்புமிகு. பி. பி. தேவராஜ் அவர்களது அழைப்பின் பேரில் விழாவிற்கு வருகை தந்திருந்த சன்மார்க்க தேசிகன் ஊரான் அடிகளார் அவர்கள் சமயத்திற்கும் சாகியத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அருட் பெருஞ்ஜோதி-தனிப்பெருங் கருணை-இராமலிங்க அடிகளாரின் சன்மார்க்க நெறியாலேயே உலகில் அமைதி தோன்றும் அடிகளாரின் அருட்பாவில் தமிழின் இனிமையும், புதுமையான பக்திச் சுவையும் மிளிர்வதைப் பார்க்கலாம்! என்று, குறிப்பிட்டு, ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழாச் சிறப்பாக நடைபெற நல்லாசி வழங்கினார்.

ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சின் செயலாளர் ய. பிரேமதாசா அவர்களின் வர வேற்புரையைத் தொடர்ந்து, ஊவா மாகாண அமைச்சர் மாண்புமிகு. எம். சச்சிதானந்தன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில், பல சிறப்பான அம்சங்களைக் குறிப்பிட்டு, ஊவாவின் தனிப் பெருமையை எடுத்து விலக்கி, 1994 ம் ஆண்டுக்கான முதற் சாகித்திய விழாவாக ஊவா மாகாண இத்தமிழ் சாகித்திய விழா நடப்பதையிட்டுத் தான் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்வதாகச் சொன்னார்.

கல்வித்துறை, இலக்கியத்துறை, பொதுப்பணி, கலைத்துறை, பத்திரிகைத் துறையைச் சார்ந்த பெருமைக்குரியவர்களைப் பாராட்டிப் பொன்னாடை

போர்த்தும் பணியை நான் இவ் விழாவின் மூலம் செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டதை ஒரு பெரும் பாக்கியமாக மதிக்கின்றேன். ஊவா மாகாணத் தமிழ்க் கலைஞர்களின் வளர்ச்சியை இனி எந்த சக்தியாலும் தடுக்க முடியாதபடி வளர்ப்போம் என்றார்.

விழாவில் உரைநிகழ்த்திய ஊவா மாகாண கலாசார அமைச்சர் திரு. சமரசேகரபண்டா அவர்கள், தமிழில் ஒரு பாட்டும் பாடி விழாவில் கலகலப்பை ஏற்படுத்தினார்.

பதுளை தமிழ் மகளிர் ம. வித்தியாலய மாணவிகளினதும், பண்டாரவளை தமிழ் ம. வித்தியாலய மாணவிகளினதும் பதுளை அல் அதார் முஸ்லிம் வித்தியாலய மாணவர்களதும் இசை நடன நிகழ்ச்சிகள் விழாவை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த சமய, கலாசார ராஜாங்க அமைச்சர், மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில் "ஆண்டுக்காண்டு, காலத்திற்குக் காலம் நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின், எமது அமைச்சின் வாயிலாகத் தமிழ் மக்கள் பல துறைகளிலும் பயன்பெறும் வகையில், பலப்பல செயற் திட்டங்களை கட்டங்கட்டமாக, பல மட்டங்களில் நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் நமது இனத்தின் பெருமைகளையும், இலக்கியச் சிறப்புகளையும், வழிவழி நிலவி வரும் மரபுகளையும் வெளி உலகம் அறிய விழாக்கள் மூலம் வழி செய்துள்ளோம். இதனால் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

சாகித்திய விழா என்பது; சமுதாயத்தின் பழமைமிக்க, கலை, கலாசாரம், இலக்கியம், மொழி இயல் வளம், நாட்டார் வழக்காற்றியல் என்பதோடு இம்முறை நாடகக் கலையினையும் அரங்கியல் மரபுகளையும் பற்றிய அடிநாதமாகவே அமைந்து, உலகறியும் நிகழ்வாக அமைந்திருக்கின்றது.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளதைப் பாருங்கள். தமிழையே என்னுயிர் என்பேன் என்கிறார். இயற்கையும், ஏனைய விளை பொருள்களும் தரும் இன்பத்தைவிட தமிழ் தரும் இன்பமே இனிமையானது. என அவர் அறைகூவல் விடுகின்றார். அப்படியானதோர் மொழியுணர்வையும், பற்றினையும் இந்த சாகித்திய விழா நிச்சயம் ஏற்படுத்த வேண்டும் என்பதே எங்களது நோக்கமாகும் என்றார்.

திருவாளர்கள் டி. வி. சென்னன் எம். பி. அவர்களும் ஊ. மா. சபை உதவித் தலைவர் எம். சுப்பையா அவர்களும் உரையாற்றினர்.

1993ம் ஆண்டு சிறப்பான பெறுபேறுகளை க. பொ. த. தேர்வில் ஊவாவில் பெற்ற கோணக்கொலை த. ம. வித்தியாலயத்தின் அதிபருக்கும் ஏனைய அவ்வகுப்பு ஆசிரிய - ஆசிரியைகளுக்கும் அமைச்சர் எம். சச்சிதானந்தன் அவர்கள் சிறப்பான பரிசும் பாராட்டும் வழங்கி வாழ்த்தினார்.

இந்தியாவின் உதவித்தூதுவர் உயர் திரு. அ. கருப்பையா அவர்களின் வாழ்த்துரையினையைத் தொடர்ந்து தலைவர் தொண்டமான் அவர்கள் உரையாற்றுகையில், விழா எடுப்பது வருடத்திற்கு ஒரு முறையாக மட்டும் அமையக்கூடாது. மலையக மக்களாகிய நமது கலைகள், பண்பாடு எல்லாம் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்ததாகும். இந்தக் கலைகளையும் பண்பாட்டு மரபுகளையும் நாம் பேணிக் காப்பதற்கு இந்த சாகித்திய விழாவைப் போன்ற பல கலாசார விழாக்களையும், கலை நிகழ்ச்சிகளையும் அடிக்கடி நாம் நடாத்த வேண்டும். இளந் தலைமுறையினருக்கு தமிழர்களின் பாரம்பரிய மரபுகளை அறிமுகஞ் செய்வதற்கும் அவைகளை அறிந்து அவர்கள் அதனை வளர்ப்பதற்கும் மாதங்கள் தோறும்,

மலையகத்தில் பல விழாக்களை நடாத் துங்கள். என்றார்.

இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சும், ஊவா மாகாண இந்து கலா சார அமைச்சும் கூட்டாக நடாத்திய சிறுகதைப் போட்டிகளிலும், நாடகப் போட்டிகளிலும் பரிசு பெற்றவர்களுக்கு அமைச்சர் எம். சச்சிதானந்தன் அவர்கள் பரிசுகள் வழங்கினார் 'ஓஷான்ஸ்' இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி விழாவில் கல கலப்பையும், கைதட்டலையும் ஏற்படுத் தியது.

(விழாவைத் தொடக்கி வைத்துப் பேசிய, இந்து சமய, கலாசார ராஜாங்க அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள், விழா வின் நோக்கத்தை விளக்கி சாகித்திய விழா வெற்றியடைய வாழ்த்தினார்.) ஊவா மாகாண முதலமைச்சர் மாண்பு மிகு: பேர்சி சமரவீர அவர்களும் இறுதி யில் கலந்து கொண்டார். தமிழகப் பாட கர் டி. எம். சௌந்திரராஜனும் அவரது புதல்வன் பால்ராஜும் விழாவில் கலந்து கொண்டு பாடல்களைப் பாடி அனைவரையும் இசை வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள். விழா அனைத்தும் சிறப்பாக நிறைவுபெற்றது. -ஆ-ர்

## நனைந்த குழந்தை

ஒட்டைக் குடிசைக்குள்ளே
ஓராயிரம் கற்பனைகள்
ஒட்டைக் கூடாக
ஓடையாய் ஓடி வரும்
மழை நீரில்
மாதவள் நனைந்தும்
மனக் கவலை
கொள்ளவில்லை.
மடியில் இருக்கும்
மகவைக் காக்க
தன்னையே கூரையாக்கினாள்.
தாயின் கண்ணீரால்
நனைந்த குழந்தையை
காரிகையின் கூரை
என்ன செய்யும்.

— நா. இளங்கோபன்

## 'அகிலம்' வெளியீட்டு விழாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

கண்டி கலை - இலக்கிய ரசிகர் மன்ற அங்குரார்ப்பணம் அகிலம் வெளியீட்டு விழாவில் 'அகிலம்' ஆசிரியர் கே. வி. இராமசாமி அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட சான்றோர் கள் வருமாறு:-

1) இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சராக விருந்து சமயத்துக்கும், இலக்கியத்துக்கும் அயராது பணிபுரிந்த மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்க ளும், அவரது பணிகளுக்கு உறுதுணை புரிந்த அவரது துணைவியாரும்.
2) கல்விக்கும், தமிழ் மொழிக்கும் இலக் கியத்துக்கும் நிகரற்ற சேவை செய் துள்ள - செய்துவரும் இலக்கியச் செம் மல் - கலா கீர்த்தி பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்களும், அன்னாரது உயர்வுக் கெல்லாம் அடக்கத்தோடு வழிகாட்டும் திருமதி தில்லைநாதனும்.
3) தொழிலதிபரும், சமாதான நீதவா னும், சமூக சேவையாளருமான எஸ். முத்தையா அவர்களும், அவருடன் சளைக்காது ஒத்துழைப்பு நல்கி வரும் அவரது துணைவியாரும்.
4) அகில இலங்கை சமாதான நீதவானும், வர்த்தகப் பிரமுகரும், சமூகத் தொண் டருமான வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்களும், அவரது பணிகளுக்குப் பக்க பலமாகத் திகழும் அன்னாரது துணைவியாரும்;

# திருக்குறள் சிந்தனை
## ( அறத்துப்பால் )

### நீத்தார் பெருமை

### விளக்கவுரை

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

பற்றுகளைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.

23. இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

பிறப்பு வீடு என்பனபோல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

24. உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

அறிவு என்னும் கவியினால் ஐம்பொறிகளாகிய பானைகளை அடக்கிக் காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

27. சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டேஉலகு

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தன் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும்.

29. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது

நல்ல பண்புகளாகிய மலையின் மேல் ஏறி நின்ற பெரியோர் ஒரு கணப்பொழுதே ஆயினும் சினம் கொண்டு காத்தல் அறிதாகும்.

30. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

# நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்

திருமதி. ஞானம் ஞானசேகரஐயர்

(மத்திய மாகாண இந்து சமய பாட இணைப்பாளர்; ஆலோசகர்)

சிலம்பு தமிழரின் பாரம்பரிய தனிப் பெருஞ் செல்வம். இக் காப்பியத்தில் நெஞ்சில் கலந்துவிடும் கதாபாத்திரங்கள் உலவுகின்றனர். இசை உள்ளத்தை இனி தாக்கி இயக்குகின்றது. கூத்துகள் திகழ் கின்றன; குரவைகள் ஒலிக்கின்றன. பண்கள் தவழ்ந்து வருகின்றன. அறநெறி சிறந்த அறவொழுக்கங்கள் முன்வைக்கப்படுகின் றன. அதுமட்டுமன்றி தமிழகத்தின் வளம், தமிழினத்தின் மிக உன்னத நாகரிக வாழ்வு, தமிழரின் பேராண்மை, கொடைப்பண்பு, யாவும் மிளிர்ந்து காணப்படுகின்றன. வர லாற்றுச் செய்திகள், வாழ்க்கைத்தத்துவ உண்மைகள், வாழ்க்கைப் பிரச்சனைகள் ஆகியபலவும் வளம் செறிந்த தமிழிலே நயமுடன் ஒளிர்கின்றன. மூவேந்தர்தம் சிறப்பு, நாட்டுவளம், முத்தமிழின் செழு மை, காவிய அமைப்பின் கனிவு யாவற்றை யும் சிலம்பிலே நாம் சுவைத்து மகிழலாம் சிலம்பினை தமிழன்னையின் காற் சிலம்பு என்றே போற்றுவர் அறிஞர்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர், ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்'

இவற்றை அடிநாதமாகக்கொண்டே இளங் கோவடிகள் இக்காபியத்தை யார்த்தார். அதற்கு அரும் பெரும் உரையினைப் பகர்ந் தவர் அடியார்க்கு நல்லார். முத்தமிழ் விரவிய இக்காபியத்தின் கதை மூன்று நாடு களில் நடைபெறுகிறது. மூன்று பெண்கள் முக்கிய இடம் பெறுகின்றனர். கண்ணகி சோழ நாட்டில் பிறந்து, கணவனுக்காகப் பாண்டியமன்னனுடன் வாதிட்டு சேர நாட்டில் சிலையானாள். பண்டைக் காலத் தில் தமிழர்தம் மணவினை எவ்வாறு நிகழ்ந்தது எனக் கூறுவதும் இக் காப்பி யமாகும்.

'நீல விதானத்து, நித்திலப் பூம் பந்தர்க்கீழ்,
வான்ஊர் மதிய. சகடு அணைய வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்,
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட,
தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை!

திருமண வைபவத்தின் பொழுது, அக் கினி சாட்சியாக தீவலம் வரும் மரபினை உலகுக்கு எடுத்துக் காட்டியது இக்காப் பியமே, இன்றும் இது வழக்கில் இருப்ப தைக் காணலாம்.

கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்து, தனிக் குடித்தனம் நடத்திய வேளையில், அவள் மேல் ஆராக் காதல் கொண்டு எங்ஙனம் புகழ்கின்றான் என்ப தனை, சிருங்காரம் நிறைந்த கவிச்சுவை யுடன் இளங்கோவடிகள் பின்வருமாறு கூறுகிறார்.

'மாசு அறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசு அறு விரையே! கரும்பேர் தேனே!

அரும் பெறல் பாவாய்! ஆர் உயிர்! மருந்தே!
பெருங்குடி வாணிகள் பெரு மட மகளே!

சிலப்பதிகாரம் ஓர் அறக்காப்பியம் என்பது பலரின் கருத்தாகும். அறநூல் களிலே இலக்கியச் சுவை குன்றுவது இயல்பு ஆனால் எக்காப்பியத்திலும் இல்லாத இலக்கிய சுவையினை, நயத்தினை இந்நூலில் காணமுடிகின்றது. இது ஆசிரியரின் திறைமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. பிற மகளிரின் கணவனை ஒரு பெண் தனதாக்கிக் கொள்ளுவது, தவறு என்பதனையும் இக்காப்பியம் எமக்கு எடுத்து இயம்புகின்றது. கண்ணகியின் கணவன் கோவலன் என்று தெரிந்தும் மாதவி அவனைக் கவருகிறாள். ஆனால் கோவலுடன் அவள் தொடர்ச்சியாக வாழ முடியாமல் போகிறது. அத்துடன் அவளது வாரிசான மணிமேகலையும் துறவுக்கு போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டின் சிறப்பு இங்கே வலியுறுத்தப்படுகிறது.

ஊழ்வினையின்கண் எவரும் தப்பமுடியாது. விளையத்தொடாங்கிய வினையினை நிறுத்தவும் முடியாது. கோவலன் உண்மையில் கள்வன் அல்லன் ஆனால் ஊழ்வினைப்பயனால் அவன் கள்வன் எனக் குறிக்கப்பட்டு கொல்லப்படுகிறான்.

கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு, கண்ணகி புலம்பி, பாண்டிய மன்னனின் முன்சென்று வழக்குரைப்பதும், தன் தவறினை உணர்ந்த மன்னன் அரசு கட்டிலே விழுந்து உயிர்துறப்பதும், ஆகிய கதைப் பகுதிகள் நாடகத்தமிழுக்கு இலக்கணமாய்த் திகழ்கின்றன.

இக்காப்பியத்தில் உலாவரும் மூன்று பெண் பாத்திரங்களையும் இளங்கோவடிகள் சிறப்பாக வடித்திருக்கின்றார். பாண்டிய அரசன் அறம் பிழைத்தது. செங்கோல் கொடுங்கோல் ஆயிற்று எனப் பதறி உயிர் நீர்த்த பொழுது, பாண்டிமா தேவி தானும் அக்கணமே உயிர் துறக்கிறாள், இங்கே கற்பொழுக்கம் பேணப்படுகின்றது ஆனால், கண்ணகியோ உயிர் வாழ்ந்த பாண்டியநாட்டையும் எரியூட்டி கற்பின் இலக்கணத்திற்கு பிறிதொரு பரிணாமத்தை தருகின்றாள். மாதவியோ தன் கணவன் கோவலன் மட்டுந்தான் என்பதனை எடுத்துக்காட்ட, கோவலன் தன்னை விட்டுப் பிரிந்ததும் துறவறம் மேற் கொள்கின்றாள். இப்படியாக கற்பினுக்கு வெவ்வேறு வகையான இலக்கணங்களை வகுத்து வாசிப்போரை பிரமிக்க வைக்கின்றார் இளங்கோ அடிகள்.

வள்ளுவப் பெருந்தகை, கற்புடையபெண் ஆனவள்
'மழை பெய் என்றால் பெய்யும்'. என்றார் ஆனால், இளங்கோவடிகளோ, கற்புடைய பெண்
எரியென்றால் தீ எரிக்கும் எனப் போற்றுகின்றார்

''தெய்வம் தொழுந்தமைமயை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாந்தர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாந்தர்க்கு விருந்து''

பாண்டிய நகரை எரியூட்டியபின் திருச்செங்குன்றத்து வேங்கை மரநிழலில் கண்ணகி நின்ற போது, இந்திரன் முதலான தேவர்கள், கோவலனுடன் வந்து அவளை அழைத்துச் சென்றதைப் பார்த்து, அதிசயித்த குரவர்குடியினர், கண்ணகியைத் தம் குல தெய்வமாக வரித்துக் கொண்டதும், சேரன் செங்குட்டுவன் தமிழரின் வீரத்தை எள்ளிநகையாடிய கனகவிஜயரின் கொட்டத்தை அடக்கி, அவர்களின் தலைமேல் கல்லேற்றிவந்து கண்ணகிக்கு கோயிலமைத்ததும், பத்தினித் தெய்வம் வழிபாட்டின் ஆரம்பமும் இக்காப்பியத்திலே சுவைபடக் கூறப்படுகின்றன.

ஐம்பெருங் காப்பியங்களாகத் திகழ்பவை மணிமேகலை வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம்

( 11 ம் பக்கம் பார்க்கவும் )

# ★ நம்ம ஊர்! ★

- பண்டாரவளை அன்புச்செல்வன் -

நாலாண்டுக்கு பின்
நம்மூருக்கு வந்தேன்-

சவுதி மண்ணுக்கு
சல்லி தேடப்போய்
பாலைவன நெருப்பில்
வெந்து கறுத்து-

விமானநிலையத்தில்
விண்ணப்பம் நிரப்பி
வேலைத் தளத்தில்
வெளிநாட்டவருடன் பழகி-

பார்த்திராத உலகத்துப்
பக்கங்கள் புரட்டி
புதிதாய்த் தெரிந்த
பொருளெல்லாம் வாங்கி-

நாலாண்டுக்குப் பின்
நாகரிக வாசத்துடன்......
நம்மூருக்கு வந்தேன்

அடுத்த வீட்டு மச்சி
அமங்கலமாயிருந்தாள்
சாராய சகவாசத்தால்
ஈரல்கெட்டு புருஷன்
இறந்து போனானாம்!

தாவணி என்றொரு
துணியைச் சுற்றிக்கொண்டு
தங்கம்மா கோணினாள்
பெருசாகி விட்டாளாம் – என்
கண்கள் கூர்மையாய்......

மேட்டுலயத்து மணி
கையில் குழந்தையுடன்
அவன் மனைவி மீண்டும்
வயிற்றைச் சுமந்துகொண்டு
மேல்மூச்சு வாங்கினாள்-

கோயில் ஒலிபெருக்கியில்
"மருதமலை மாமணி"
யாரோ
மூக்கால் பாடுகிறார்கள்-

எட்டுப்பேரால் எல்லாம்
குட்டிச் சுவரானதாம்
கிட்டு சொன்னான்

அப்பா வயிற்றில் கல்
ஆப்பரேசன் செய்திருந்தார்-

இந்தத் தோட்டத்தில்
இதுதவிர
எத்த மாற்றமும்
இல்லை!

சவூதி விமானநிலையத்தை
சிலகணம் நினைத்தேன்
நெஞ்சு வலித்தது-

---

10 ம் பக்கம் தொடர்ச்சி......

ஆகிய ஐந்துமாம், இவற்றுள் சிலப்பதி காரம் படிப்போரது உள்ளத்தை ஈர்த்து இலக்கிய வானிலே நிறை நிலாவாக ஒளிர்கிறது. இதனாலேதான் மகாகவி பாரதியார்

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு"

எனப் போற்றுகின்றார்.

இன்னோரன்ன சிறப்புக்களைக் கொண்ட சிலப்பதிகாரம் என்றென்றும் இலக்கிய நெஞ்சங்களை இன்புறச் செய்து கொண்டே இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# பண்ணும், இராகமும்

மானியூர் சி. குமாரசாமி எம். ஏ.

பண் என்பது சங்க காலந் தொட்டு வழங்கப்பட்டு வந்துள்ள ஓர் இசை அமைப்பாகும். தேவாரங்கள் பாடப்படுவது பண் முறையில், கீர்த்தனைகள் பாடப் படுவது இராகத்தில் எனலாம். நிலத்தினை ஐம் பெரும் பிரிவுகளாக நம் முன்னோர் பிரித்தார்கள். குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என்பவையே ஐம்பிரிவுகளாகும், இவற்றை ஐந்திணை என்றும் கூறுவர். ஐந்திணைக்கும் பண் வெவ்வேறாக இருந்தன. மன உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு வெவ்வேறு பண்கள் கையாளப்பட்டன. அத்துடன் பகல் பண் இரவுப் பண், பொதுப்பண் என்று பண்கள் மூவகைப் பட்டன.

இப்பண்களை இசைத்தோர் பாணர் எனப் பட்டார்கள். இவர்களில் பெண்பாலார் 'விறலி' எனப்பட்டனர். இவர்கள் பாடும் போது இசைத்த இசைக்கருவிகள் யாழ்கள் எனப்பட்டன. பலவிதமான யாழ்கள் வாசிக்கப்பட்டன. சிறிய யாழ், பேரியாழ், மகர யாழ், செங்கோட்டு யாழ் எனப் பலவகைப் பட்ட இசைக் கருவிகளை அக்காலத்தில் வாசித்தனர்.

யாழ் என்பது நரம்பு அல்லது தந்திகளைக் கொண்ட வாத்தியக் கருவியாகும். சிலயாழ்களில் குறித்த ஒரு பண்ணையே வாசிக்கமுடியும். அதனால் அந்த யாழுக்கு அப்பண்ணின் பெயரையே வைத்தார்கள், இந்த இசை நுணுக்கங்களையெல்லாம் நன்கு ஆராய்து எமக்களித்தவர் முத்தமிழ் வித்கதர் சுவாமி விபுலானந்த அடிகளாவார்.

அப்பெருமானார் பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து யாத்த யாழ்நூல் இசைக் கலையின் பொக்கிஷம் எனலாம். பெரும் பாலும் ஆலய கோபுரச் சிற்பங்களை ஆராய்ந்தே அன்னார் நூலை வெளியிட்டார். அவர் தேவாரப் பண்கள் பற்றி விசேடமாகத் தமது நூலில் கூறியுள்ளார்.

அந்நூலில் 'பண்ணியல்' என்ற ஓர் அத்தியாயமும் அதற்கு அடுத்து 'தேவார இயல்' என்று ஓர் அத்தியாயமும் உண்டு. முற்காலத்தில் 103 பண்கள் இருந்தன என்றும், அப்பண்களையே தேவாரத்துக்கு அமைத்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

யாழ் என்பது இக்காலத்தில் வழங்குகின்ற சரஸ்வதி வீணை அல்லது உருத்திர வீணை போன்ற அமைப்பினை உடையது மனிதக் குரலுடன் ஒன்றி வாசிக்கக்கூடிய இசைக்கருவி வீணையாகும். வயலின் அல்லது பிடில் என்பது மேல் நாட்டவர் வருகையின் பின்னர் கையாளாப் பட்டு வந்த கருவியாகும்.

பண் என்பது பாவோடு அணைத்தல் என்பதாகும்.

> ''பாவோடணை தல் இசைஎன்றார்
> பண்என்றார்
> மேவார் பெருந்தான மெட்டா
> னும் - பாவாய்
> எடுத்தல் முதலா இரு நான்கும்
> பண்ணிப்
> படுத்தமையாள் பண்ணென்று
> பார்.''

பண்ணுதல் என்னும் வினையடியாகப் பிறந்தது பண். இது ஆன்மாக்களை இறைவனோடு ஒன்று படுத்த வல்லது. பண் எல்லாம் இசையிலே அடங்கும். இசையானது தெய்வீகமானது. பண்ணை வகுத்துக் காட்டியதும் இறைவன் செயலே யாகும்.

மூவர் தேவாரங்கள் பாடியதற்கு முன்னதாகவே பண் கையாளப் பட்டு வந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி தாரம் என்ற சுரங்களே பிற்காலத்தில் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரமென வழங் கலாயின. தமிழ்ப் பெயர்கள் அன்னிய மொழி பேசுபவரது ஆட்சியால் நாளடை வில் மறைந்து போயின.

பண்ணிற்கும் பிற்காலத்தில் வந்த இராகத்துக்குமுள்ள வேறு பாட்டினைப் பார்போம். உதாரணமாக "தோடுடைய செவியன்'' என்ற தேவாரத்தின் பண் நட்டபாடையாகும். பண் ஆராய்ச்சி யின்படி இதற்குரிய ராகம் கம்பீர நாட் டையும், தாளம் ரூபகமும் ஆகும்.

நாம் சற்று உன்னிப்பாகக் கவனித் தால் பண்ணிற்குள் இராகமும், தாளமும் அடங்குகின்றன அல்லவா?

இதே பண்ணில் அமைந்த "அங்கமும் வேதமும்'' என்ற தேவாரத்தின் இரா கம் கம்பீரநாட்டை ஆனாலும் தாளம் ஆதி ஆகும். பண்ணில் எங்கே தாளம் இருக்கிறது? என்ற வினா எழும்புகிறது இதனையே ஓதுவார்கள் கட்டளை பேதம் என்று கூறுவார்கள். கட்டளை பேதம் என்பது சொற்களின் அடுக் கினைக் குறிக்கும். இவையெல்லாம் பண்ணின் நுணுக்கங்கள் தமிழகக் கோயில்களில் பண்ணார் இன் தமிழாய்ப் பாட்டகத்து இசையாய் உள்ள இறை வன் திருமுன் ஓதுவாரைக் கொண்டு திருமுறைகளான தேவாரம், திரு வாசகம், திருவிசைப்பா, திருப்பல் லாண்டு, திருப்புராணம் போன்ற திருப் பாடல்கள் ஓதப்படுகின்றன. அப்பாடல் கள் மரபு வழுவாமல், பண்கள் மாறாமல் பாடப்பட வேண்டும் என்று தமிழக அறநிலையத்துறை விரும்புகிறது. தேவா ரப் பண்கள் இறைவனுக்குரிய தோத்தி ரங்கள்.

வடநாட்டிலிருந்து வந்த சாரங்க தேவர் என்பார் தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் தோறும் சென்று அங்கு பாடப்பட்ட தேவாரப் பண்களினை சேகரித்து அவற்றின் அடிப்படையிலேயே "சங்கீத இரத்தினாகரம்'' எனும் நூலை யாத்தார். 72 மேளகர்த்தா இராகங் களையும் வேங்கடமகி புனைவதற்கு இத்தேவாரப் பண்களே உதவியுள்ளது என்பதை இசைப் பேராசிரியர் சாம்ப மூர்த்தி அவர்களுடைய நூலிலிருந்து அறியலாம்.

"இந்தியாவில் தேவாரப் பண்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. வேத கானம் தேவாரத்திற்கு முந்தியதானா லும் அது தாளத்திற்கு அமைத்துப் பாடப்பட வில்லை. ஆனால் தேவாரப் பண்கள் தாளத்திற்கு அமைத்துப்பாடப் பட்டன இன்றும் கர்னாடக சங்கீதம், இந்துஸ்தானி சங்கிதம் என்னும் பிரிவுகள் ஏற்படாத காலத்தில் தேவாரங்கள் அரு ளப்பட்டதனால் இந்தியாவிலே எல்லா சங்கீதவித்துவான்களும் தேவார இசை யில் கவனஞ் செலுத்தி வருகிறார்கள்.''

மேலும், பிற்காலத்தில் பல இரா கங்கள் உற்பத்தியாவதற்குத் தேவாரப் பண்கள் உதவியாக இருந்துள்ளன. தேவாரப் பண்கள் எல்லாம் இரக்தி இராகங்கள் — உள்ளத்தைத் தொடுவன. பல வகையான கமகங்களும் நுட்ப சுருதிகளும் பண்ணில் ஒலிப்பதைக் கவனி த்தல் வேண்டும்.

ஆகவே தேவாரப் பண்களிலிருந்தே மேளகர்த்தா இராகங்களும் நூற்றுக் கணக்கான ஜன்னியராகங்களும் உருவா யின - சில பண்களையும் இக்காலத்தில் வழங்கிவரும் இராகங்களின் பெயர்களை யும் பார்ப்போம்:-

| பண் | | இராகம் |
|---|---|---|
| 1 | நட்டபாடை | கம்பீரநாட்டை |
| 2 | நட்டராகம் | பந்துவராளி |
| 3 | தக்கராகம் | காம்போதி |
| | தக்கேசி | |
| 4 | காந்தாரம் | நவரோஸ் |
| | பியந்தைக் காந்தாரம் | |
| | கொல்லி | |
| | கொல்லிக் கௌவாணம் | |
| 5 | பழம் பஞ்சுரம் | சங்கராபரணம் |
| 6 | காந்தார பஞ்சமம் | கேதாரகௌளை |
| 7 | சாதாரி | பந்துவராவி |
| 8 | குறிஞ்சி | ஹரிகாம்போதி |
| 9 | பழந்தக்கராகம் | ஆரபி |
| 10 | மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |
| 11 | கௌசிகம் | பைரவி |
| 12 | பஞ்சமம் | ஆகிரி |
| 13 | வியாழக் குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| 14 | இந்தளம் | மாயாமாளவகௌளை |
| 15 | திருக்குறுந்தொகை | ,, |
| 16 | செந்துருத்தி | மத்தியமாவதி |

பண்ணில் வரும் கட்டளை பேதம் என்பது மாத்திரை அளவும், எழுத்தியல் நிலையும் பற்றி செய்யுட்களில் அமைந்த ஓசைக் கூறுபாடு ஆகும். திருப்பாடல்களின் யாப்பமைப்பு, சந்தங்கள் நோக்கி தாள நடை பேதங்கள் ஏற்படுகின்றன. இவற்றையே கட்டளை பேதம் என்பர்.

சைவாலயங்களில் கொடியேற்ற விழாவிலும் கொடியிறக்க விழாவிலும் நவசந்திகளில் வேதம், பண், இராகம் மூன்றும் ஓதப்படுவதை நாம் அவதானிக்கிறோம் இவற்றில் இருந்து நாம் அறிவது யாதெனில் பண்ணும் இராகமும் ஒன்றல்ல என்பதே சைவர்களாகிய நாம் தேவாரப் பண்களை முறையாக பக்தி சிரத்தையுடன் ஓதினால் இம்மை மறுமைப் பலன்களை நாம் பெறலாமன்றோ!!

---

கல்வி கற்றவரை எளிதில் திருப்பலாம். ஆனால், ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம், ஆனால், அடிமைப்படுத்த முடியாது.

- புறோகா

இனிய சொற்களின் விலை அற்பம் . ஆனால் அதன் மதிப்போ அதிகம்.

- கோர்பல்

# தமிழில் மகளிர் இலக்கிய வளர்ச்சி

- திருமதி லலிதா நடராஜா B. A. Dip. - in - Ed. -

( பிரிவுத்தலைவர், நல்லாயன் மகளிர் கல்லூரி - கண்டி )

சென்ற மாத இதழின் தொடர்ச்சி.........

எனவே, பெண்ணினம் பூரண விடுதலையை அடையாவிடினும் கூட பெண் கல்வி பெருகிற்று - பெண்கள் கற்று உத்தியோகமும் பார்க்கலாயினர். இதன் விளைவாக தமிழ் இலக்கியத்திலும் பெண்கள் பங்களிப்பு ஏற்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது. இவ்வகையில் பிற்காலத்தமிழ் இலக்கியத்திற்கு முன்னோடிகளாயமைந்தவர்கள் நீலாம்பிகை (1903-45) ஈ. த. இராஜேஸ்வரி (1906-55) எனும் இரு பெருங்குடிப் பெண்டிர். மறைமலையடிகளின் மகளாகிய நீலாம்பிகை - சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சராய் விளங்கிய திருவரங்கனாரில் இல்லத்தரசியார் - ஒப்பற்ற தனித்தமிழ் பற்றுடையவர் இவர். தனித்தமிழ்கட்டுரைகள்' என்ற இவரது நூல் கட்டுரை எழுத விழைவோருக்கு, ஒரு முன்மாதிரியாக அமைவது. இது தவிர ''முப்பெண்மணிகள் வரலாறு'' பட்டினத்தார் பாராட்டிய மூவர்'' வடசொற் தமிழகரவரிசை என்ற நூல்களையும் இயற்றிய பெருமை அவர்க்குண்டு.

ஈ. த, இராஜேஸ்வரி அம்மையார் 'அறிவியல் மழை பெய்த மேகம், என வருணிக்கப்பட்டவர், சூரியன் பிரமாணுப்புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதி வெளியிட்டார். இராணி மேரிக்கல்லூரியில் அறிவியல் பேராசிரியையாக பணியாற்றிய இவர் தமிழிலக்கியம், அறிவியல் என்ற இரு துறைகளிலும் சிறந்து விளங்கியதோடு திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களில் உள்ள அறிவியல் உண்மைகளை ஆய்ந்தறிந்து சொற்பொழிவுகளின் மூலமும் தம் கருத்துக்களைப் பரப்பியவர் - எனினும் இளமையிலேயே மரணித்தமை - தமிழ் இலக்கிய உலகிற்கே பேரிழப்பு எனலாம்.

ஐரோப்பிய கிறிஸ்தவ பாதிரிமாரின் தொண்டின் காரணமாக சென்ற நூற்றாண்டிலிருந்து உரை நடை வேகமாக வளர்ச்சியுற்றது. அச்சியந்திர வருகையால் பத்திரிகை, சஞ்சிகைகளின் தோற்றமும், பெருக்கமும் உரை நடை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தன. மேனாட்டுக் கல்வியறிவும் இத்துடன் இணைந்து கொள்ள ''தமிழில் நலமான இலக்கியமாக நாவல் இலக்கியமும், சிறுகதை இலக்கியமும் பெரிதும் வளர்ச்சியுற்றன. இந்த நூற்றாண்டின் புகழ் மிக்க நாவலாசிரியைகள் லக்ஷ்மியும் ராஜம் கிருஷ்ணனும் ஆவர். வெள்ளை நிறத்தொரு பூனை, மன்னிப்பின் மறுபக்கம், பூக்குழி, வைரமூக்குத்தி கையில் அள்ளிய மலர்கள், மிதிலாவிலால், காஞ்சினையின் கனவு, சூரிய காந்தம், லட்சியவாதி, வானம்பாடிக்கு ஒரு விலங்கு, கூண்டுக்கு வெளியே முதலிய பல நாவல்களையும், ஆப்பிரிக்கக்கண்டத்தில் பல ஆண்டுகள் என்ற அனுபவக்கதையையும் எழுதியவர் லக்ஷ்மி. மிக எளிய, இயல்பான நடையில் குடும்பச்சூழலில் கதை புனைவதில் வல்லவர் ஆவார். இதனால் அவர் நூல்கள் பெரும் வரவேற்பை பெற்றன. ஆர். சூடாமணி, கிருஷ்ணா, விமலா ரமணி, இருத்திகா, ஊர்வசி கமலா சடகோபன். போன்றோரும் குடும்பப்பாங்கான பாத்திரப்படைப்புகளைக் கையாண்டு நாவல் புரிவதில் சமர்த்தர்கள். ஹேமா ஆனந்த தீர்த்தனின் கதைகள் காதல் ரகம் மிக்கவை,

பெண்களின் உரிமைக்காகப் போராடி அந்தப்போராட்டத்தை மெல்லிய உணர்வுகளின் மூலம் வெளியிடுவதில் வல்லவர் "அம்பை" இவரது 'சிறகுகள் முறியும்' இதற்கு சிறந்த உதாரணம், குயிலி இராஜேஸ்வரியும் இங்கு குறிப்பிடத்தக்கவர்.

எழுபதுகளில் துவங்கி இன்னும் வெகுசன பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருப்பவர்களில் இந்துமதி, வாஸந்தி, சிவசங்கரி ஆகியோர் முக்கியமானவர்கள். இந்துமதியின் "தரையில் இறங்கும் விமானங்கள்" மனித மனங்களின் மெல்லிய உணர்வுகளை துல்லியமாக பிரதிபலித்தமைக்காக நல்ல வரவேற்பை பெற்றன. மனோதத்துவ கண்ணோட்டத்தில் பெண்களின் போராட்டங்களை சுவையான கதைகளாக வடித்தெடுப்பதில் வாஸந்தி வல்லவர். அவர் தன்னை ஒரு பெண்மைவாதி என்றே குறிப்பிடுகின்றார். சமூகத்தில் புரையோடிப்போயுள்ள மதுபழக்கத்தினால் எவ்வாறு மனித வாழ்க்கை நிலை தளருகின்றது என்பதை தத்ரூபமாக எடுத்துக்காட்டுகின்றது சிவசங்கரியின் "ஒரு மனிதனின் கதை" அவருடைய 'நெருஞ்சி முள், இத்தகு சமூக சீர்திருத்தக்கருத்துக்கள் மிக்கதே. அவருடைய ஆக்கங்கள் நவீன பாவியினை (Modern Trend) பிறதிபலிப்பதால் இளம் வாசகரிடையே பெரும் வரவேற்பை பெறுகின்றன. எழுபதுகளின் கடைசியில் எழுதத்தொடங்கிய 'அனுராத ரமணன்' தன் அழுத்தமான பாத்திரப்படைப்பினால் தனித்து நிற்பவர். இன்று அதிகமான நாவல்களை ஆக்கித்தரும் மகளிருள் 'ரமணி சந்திரனும்' ஒருவர்.

1945ல் ஏற்பட்ட இலவசக்கல்வியின் பயனாக இலங்கைப்பெண்களிடையே கல்வியறிவு வளர்ச்சி அதிகமாக உள்ளது. இச்சமூக விழிப்பின் காரணமாக பெண்ணுக்கு உயர்கல்வி, உத்தியோக வாய்ப்பு என்பன பெருகின, பெருகியுள்ளன. உலக அறிவு வளர்ச்சியின் பரம்பல் இன்றைய இலங்கைத் தமிழ் மகளிரிடை பெரிதும் வளர்ந்துள்ளது. இதனால் அவர்களிடையே இலக்கிய ஈடுபாட்டையும் விழிப்புணர்ச்சியையும் காணக்கூடியதாகவுள்ளது. எனவே அவர்கள் பங்களிப்பையும் இங்கு ஆராய்தல் அவசியமாகின்றது.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்கொளுத்தும்" நோக்குடன் சஞ்சிகையொன்றினை சிலகாலம் வெளியிட்டவர் "மங்களம்மாள்" இந்தியத் தமிழ் மகளிர் இலக்கிய எழுச்சிக்கு ஆனந்தவிகடன், கல்கி, குமுதம், கலைமகள் போன்ற வார, மாத சஞ்சிகைகள் துணை புரிந்ததைப்போல் இலங்கைப் பெண் எழுத்தாளர்களது ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தவை தினகரன் வீரகேசரி, தினபதி, சுதந்திரன் போன்ற நாளிதழ்கள் ஆகும். 1950 களின் பின்னரே - சிறுகதை, நாவல் இலக்கியங்களில் எம்மவர் பங்களிப்புப் பெருகிற்று எனலாம். பத்மா, சோமகாந்தன், வள்ளி நாயகி, இராமலிங்கம், பவானி ஆழ்வாப்பிள்ளை, சாந்தினி த பிராஜா முதலியோர் 'முன்னோடிகள்' எனலாம் பா. பாலேஸ்வரி, அன்னலட்சுமி இராஜதுரை, யோகா பாலச்சந்திரன். இராஜேஸ்வரி சுப்பிரமணியம், கோகிலா மகேந்திரன் முதலியோர் நவீன இலக்கியத்துறையில் 2ம் தலைமுறையினர் எனலாம். கமலினி செல்வராஜன், தாமரைச்செல்வி தமிழ்ப் பிரியா, அருள்ராணி, சாந்தியாகராஜா முதலியோர் எழுபதுகளின் பின் தம் பங்களிப்பை நல்கியுள்ளனர். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பத்துசொற்பொழிவுகள் ஆன்மீக உணர்வுகளைத் தூண்டவல்லவை.

மலையகத்தை பொறுத்தவரை மீனாட்சியம்மை, நடேசையர் தம் கணவர் நடத்திய "தேசபக்தன்" எனும் தினசரியை துணைவர் வெளியூர் சென்ற வேளைகளில் நடத்தி ஆசிரியத்தலையங்கமும் எழுதியுள்ளார். பெண்களின் விழிப்புணர்வுக்காக பல கட்டுரைகளை

யும் எழுதியுள்ளார். 1940ல் 'இந்தியர் களது. இலங்கை வாழ்க்கையின் நிலைமை ''என்ற திருமதி மீனாட்சி அம்மையார் எழுதிய பாடற்தொகுதி அட்டனில் அச்சிடப்பட்டு மலையகப் பாட்டாளி வர்க்கத்தினரிடையே பரப்பப்பட்டது. 1950 களில் கோகிலம் சுப்பையா தம் பங்களிப்பை நல்கினார். அவரது 'தூரத் துப்பச்சை' மலையக மண்வாடை மிக்கது அடுத்து 'மங்கை' என்ற சஞ்சிகையையே சிறிது காலம் நடத்தியவர் சிவபாக்கியம் குமாரசுவாமி. நயிமா சித்திக் ஆக்கங்கள் மலையக மகளிர் பங்களிப்பைப் பெருக்கின. புசல்லாவ இஸ்மாலிகா அருமையான புதுக்கவிதைகளை வடிப்பதில் பிரசித்தமானவர் 'ஷாமிளாவின் இதயராகம்' என்ற நாவலை தன் கணவருடன் கூட்டுச்சேர்ந்து படைத்தவர். இது தவிர பூரணி, சரஸ்வதி (இஸ்மாலிகா) என்ற மலையக மகளிர் படைப்புக்களும் நவீன தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளன.

20ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியப்போக்கினை ஆய்வோர் பின்வரும் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றனா.

1. பெண்கள் குடும்பக் கதைகளையே எழுதுகின்றனர்.

2. பெண்கள் தாய்மை, தாய்ப்பாசம் மனைவியின் தியாகம் போன்ற மரபார்ந்த வரையறைக்குள் நின்று தனி மனித பிரச்சினைகளாகவே அணுகுகின்றனரே தவிர - அவற்றை சமூகபகைப்புலத்தில் வைத்து நோக்க முயல்வதில்லை.

3. இக்காலகட்டத்தில் பெண்கள் அவர்கள் வாழ்க்கை பிரச்சினைகள், திருமணம், சீதனம், பற்றிய ஆக்கங்கள் தோன்ற வழிவகுக்கப்பட்டுள்ளது.

4. கீழ் மத்திய வகுப்புப் பெண்கள் தொழில் பார்க்கையில் எதிர்நோக்கும் 'வேலை கொள்வோரின்' தொந்தரவுகள்' போன்ற பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால் இப்பிரச்சினை கண்டிக்கத்தக்கது. என்ற கருத்துக்குன்றி வெளியே 'தொழில்புரிவது' பெண்மையின் முழுமைக்குத் தடையாகவுள்ளதாகவே சித்தரிக்கப்படுகின்றது.

5. எனினும் இதற்கு மாறாக புதிய ஆரோக்கியமான போக்கு ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆணாதிக்கக் கருத்துகளும் - பெண் விடுதலைப் போக்குகளும் முட்டி மோதும்போது ஏற்படும் பிரச்சினைகள் பெண்களது உண்மையான உணர்வுக்கோலங்கள் என்பவற்றை கையாளும் யதார்த்தப் போக்குடைய மகளிர் இலக்கியவாதிகள் மரபார்ந்த மகளிர் இலக்கியவாதிகளுக்கு மாறுபட்டவர்களாகத் தோன்றியுள்ளனர். ஆனால் இத்தகு துணிவு வாய்ந்த மகளிர் இலக்கியவாதிகள் ஜோதிர்லதா, கிரிஜா, அம்பை, மா. செண்பகம், ஊர்வசி சிவரமணி போன்ற ஒருசிலரே எனக் குறிப்பிட்டுள்ளார். இத்தகு போக்குக்கு உதாரணமாக இறகுகள் மூறியும் (1975) வீட்டு மூலையில் ஒரு சமையலறை (1988) ஆகிய இரு கதைத்தொகுதிகளைத்தந்த 'அம்பை' யின் படைப்புக்களில் இதுகாலும் அலட்சியப்படுத்தப்பட்டுள்ள பெண் உறவுகள், காதல், பாலியல் குடும்பம் பற்றிய ஆழமான வலுவான வினாக்கள் எழுப்பப்படுவதாக குறிப்பிடப்படுகின்றன 'ஸஞ்சாரி' என்ற அம்பையின் கதையில் சுதந்திர உணர்வுள்ள ருக்மா தொடுக்கும் வினாக்கள் இவை இது உண்மையா ரங்கா? 'லவ் என்றால் என்ன? நமக்குத்தெரியுமோ? நீ சொல்லும் சில சொற்கள் அடிவயிற்றில் சீறிப் பாய்ந்து நெஞ்சை முட்டுகிறதே? இதுவும் லவ்வா? நான் உன் உடைமைப்பொருளா? நீ அரசோச்சும் இராச்சியமா? ஒரு முறை உன்னிடமிருந்து எதையோ பிடுங்க வந்தபோது

என்னை கீழே தள்ளிவிட்டுப்பார்த்தாயே? அப்போது குதறவரும் நாயின் பைத்தியக்கார வெறி உன் கண்களில் எனக்குத் தெரிந்தது. இதுவும் காதலா? என்னை நீ மதிக்கிறாயா?

இவ்வினாக்கள் துணிச்சல் மிகுந்த ஒரு யதார்த்தப் போக்கினை பிரதிபலிப்பனவல்லவா? இத்தகு துணிவான புதுப் போக்கு ஒன்றை கோகிலா மகேந்திரனின் 'துயிலும் ஒரு நாள் கலையும்' என்ற சிறுகதையிலும் காணப்படுகிறது. யாழ் பெண்கள் ஆய்வுவட்டத்தால் வெளியிடப்பட்ட '24 கவிதைகள் கொண்ட சொல்லாத சேதிகள் (விடுதலை வேண்டியும் சொல்லாத சேதிகள்) தெரிவிக்கும் சேதிஇதுதான்

''பூமியின் பரப்புக்கு
அப்பால்
அண்டவெளியின்
ஸ்பேஸ் ஒடிசியின் விண்
கலம் போல
எல்லையின்றி சுழலவும்
எண்ணினேன்
வானில் பறக்கும்
புள் எல்லாம் தானாக
மாறவும் எண்ணினேன்
ஆனால் காலில் பிணைந்த
இரும்புக் குண்டுகள்
அம்மியும் பானையும்
தாலியும் வேலியும்
என்னை
நிலத்திலும்
நிலத்தின் கீழே
பாதாள இருட்டிலும்
அழுத்தும்''

இத்தகு புதிய-யதார்த்தப்போக்கு, மகளிர் இலக்கியத்தில் வளர்ந்து வருவது நம்பிக்கை தருவதாய் உள்ளது. என ஆய்வாளர் கருதுகின்றனர். இவ்வாறு இருபது கழிந்து இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி அடி எடுக்கும் இவ்வளர்ச்சியுடைய (?) சமூகத்திலும் மரபார்ந்த கட்டுப்பெட்டித்தனமான போக்கினின்றும் விடுபட பலரால் முடிவதில்லை. ஆணாதிக்கம் மிகு விமர்சகரால், பெண்களின் தரமான படைப்புகள் கூட எழுத்துலகில் அடிபட்டு ஆடிக்காற்றில் அகப்பட்ட சிறுதுரும்பாய் அள்ளுண்டு போகின்றன. எதிர்காலத்தில் மகளிர் ஆழமும், தேடலும் உடைய படைப்புக்களை உருவாக்க வேண்டும். அதற்கு சமயம், வர்க்க முரண்பாடு, பாலியல் என்பவற்றைப்பற்றி துணிந்து எழுதல் வேண்டும். ஏனெனில் இவையின்றி சுயசிந்தையுள்ள எவரும் ஆழம்மிக்க இலக்கியப்படைப்புக்களை படைக்க முடியாது. - இப்பண்புகளை ஓர் ஆண் எழுதினால் இரசிக்கும் எழுத்துலகு இவற்றைப்பற்றி ஒரு பெண் விமரிசித்தால் அவளையே விமர்சிக்கும் மரபார்ந்த போக்கிலிருந்து விடுபடுவதற்கு அசாத்திய துணிவும், ஆழமான அறிவும் மகளிர்க்கு வேண்டும். இதற்கான சந்தர்ப்பங்களும், வாய்ப்புகளும் குறைவாகவுள்ளன. எனவே பெண் விடுதலையியக்கங்களும், அதில் ஆர்வம் கொள்ள வேண்டும். இவற்றைப்பெற்றுக் கொடுக்கத் துணை புரிவாராயின் - எதிர்காலத்தில் மகளிர் இலக்கியம் வளம் பெற்றுத் திகழும் - எனினும் இதற்காகக் கற்பு, தாய்மை குடும்பப்பொறுப்பு என்பனவற்றை உதறித்தள்ளும் மேற்குலகின் பெண்மைக் கோலங்களைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களை இயற்ற வேண்டும் என்பதல்ல, என் கோரிக்கை - இவற்றுக்கும் மதிப்புக்கொடுத்து - எம் ஆளுமைக் கூறுபாடுகளையும், உணர்வுகளையும் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் துணிகரமாகவும், தர்க்கரீதியாகவும் இடம் பெறச்செய்யத்தக்க இலக்கியங்களை - சுதந்திரமாகப் படைக்கத் தக்க திமிர்ந்த ஞானச்செருக்குடையனவாக மகளிர் இலக்கியங்கள் மிளிருமானால் நாடும் வீடும் பயனுறும் என்பதே என் நம்பிக்கை.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள?

நன்றி!

# நோயைத் தடுத்து குருதியைச் சுத்திகரிக்கும்

# ★ மாம்பழம் ★

**உடல் வலுவுக்கும், உள்ளம் உறுதி பெறவும் உகந்தது.**

( பதுளை ராமு )

நமக்கு மத்தியிலுள்ள பல்வேறு பழங்களில் மாம்பழமே மக்கள் பழமாக மதிக்கப்பட்டு வருகின்றது. மாம்பழம் பல்வேறு நோய்களைக் குணமாக்கும் வல்லமை கொண்டுள்ளதோடு, அதன் சாறு உடல் வலுவுக்கும், உள்ள உறுதிக்கும் உகந்ததாகும்.

மாம்பழங்களில் பேர் போனது சேலத்து மாம்பழம் என்பார்கள். ஆனால் அதே சேலத்து மாம்பழம் இலங்கையிலும் இப்போது பயிராகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நம்நாட்டில் கறுத்தக்குழம்பான், கிளிமூக்கு, அம்பளவி, நார்மாம்பழம் பிரசித்தம் யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் மாம்பழம் அளவிலும், சுவையிலும் தனித்துவமானது. புளிப்பானமாம்பழத்திலும், புளிப்பு குறைந்த மாம்பழத்திலும் உள்ள மருத்துவப் பயன்களில் எவ்வித மாற்றமும் இல்லையென மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இன்று பெரும்பாலும் ஒட்டுமாம்பழச் செய்கையே அதிகரித்துள்ளதால், விற்பனையாகும் மாம்பழங்களில் அவையே முன்னணி வகிக்கின்றன.

அதியமான் நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்து, ஔவையை நீண்டகாலம் உயிர்வாழ வாழ்த்தியதை கூறிப் பெருமைப் படுமளவு, சிவபெருமான் விநாயகருக்கு மாம்பழத்தை கொடுத்த சிறப்பை நம்மவர்களுக்கு அவ்வளவாக விவரித்து கூறவில்லை.

இனி மாம்பழத்தில் அப்படி என்ன தான் விசேஷம் இருக்கிறது என்பதைப் பார்த்து விடுவோமே!

மாம்பழத்தில் உயர்ச்சத்துகள் குறிப்பாக 'ஏ' உயிர்ச்சத்து அதிகம் இருக்கின்றது. இந்த 'ஏ' உயிர்ச்சத்து நமது இரத்தத்தைச் சுத்திகரிப்பதோடு, நோய்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கின்றது. உடல் சக்தியடைவதற்கும் உள்ளம் உறுதியடைவதற்கும் மாம்பழம் ஏற்றது. இதனால் தானோ, என்னவோ குதம்பைச் சித்தர்

'மாங்காய்ப் பாலுண்டு
மலைமேல் இருப்போர்க்கு
தேங்காய்ப் பால் ஏதுக்கடி-குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி........'

என்று பாடினார் போலும். இதுதவிர முக்கனிகளில் முதல் கனியாக மாம்பழமே மூதறிஞர்களால் குறிப்பிடப்பட்டிருப்பதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மூளை வளர்ச்சிக்கும், உடல் வலுவுக்கும் வனப்புக்கும், முகப்பொலிவுக்கும் மாம்பழம் துணைசெய்கின்றது. மேலும் இன்றைய நாள்களில் ஆண் - பெண்களுக்கு ஏற்பட்டு வரும் நரம்புத் தளர்ச்சியை மாம்பழம் அகற்றுகிறது. உணர்வுகளை மேலோங்கச் செய்வதிலும் மாம்பழத்துக்கு விசேஷ குணம் உண்டு.

பழங்களில் திகட்டாத பழம் எது என்றால் நிச்சயம் அது மாம்பழம் தான் என்பதை சிறுவர்கள் மட்டுமன்றி, பெரியவர்களும் அநுபவ ரீதியாக ஒப்புக்கொள்வார்கள்.

தாய்மையுற்றிருக்கும் பெண்கள் தாம் உட்கொள்ளும் உணவை தனக்காகவும், வயிற்றிலுள்ள சிசுவுக்காகவும் உட்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். பிரச

விக்கப்போகும் குழந்தை ஊட்டத்துடன் விளங்க தாய் மார்கள் நன்கு பழுத்த மாம்பழங்களைச் சாப்பிட வேண்டும். உடல் சோர்வுற்றிருப்பவர்களும், கை, கால் நடுக்கம், மயக்கம் உள்ளவர்களும் காலை நேரம் வெறும் வயிற்றில் மாம்பழங்களை உட்கொள்ள வேண்டும். இப்போது மாம் பழச்சாறு குளிர்பானமாக போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாலைக்கண் நோய் உள்ளவர்களுக்கும் பல் சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கும் மாம்பழம் அரும்பெரும் மருந்தாகும். மலச்சிக்கல் பல சிக்கல்களை உடலில் ஏற்படுத்தி விடுகின்றது. எனவே மலச்சிக்கல் உள்ளவர்கள் இரவில் நித்திரைக்குச் செல்லு முன்னர் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் முழுமையாகக் குணமடையும்.

மாதவிடாய் சீராக இடம் பெறாதவர்கள் மாம்பழத்தை சாப்பிட்டால் ஒழுங்காகும். இவர்கள் நன்றாகப் பழுத்த பழங்களையே உட்கொள்ள வேண்டும். மாம் பழம் உஷ்ண சம்பந்தப்பட்டதாகையால் அளவுக்கு அதிகமாக சாப்பிடக்கூடாது.

பெண்கள் மாதவிலக்கு நாட்களில் மாம்பழம் அதிகம் சாப்பிடுவதை நிறுத்தி விட வேண்டும் ஒன்றிரண்டு சாப்பிடுவதோடு திருப்திக்கொள்ள வேண்டும்.

உணவு சாப்பிடுவதற்கு முன்னர் மாம் பழங்கள் சாப்பிட்டால் பசியை அடக்கி விடும் என்பதால் சாப்பிட்ட பின்னரோ, சாப்பாட்டுடனோ மாம்பழங்களை சாப்பிடப் பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே மாம்பழத்தை நாம் மதித்து உண்ணப் பழக்கப் படுத்திக் கொள்வதோடு மாம்பழ உற்பத்தியிலும் கவனம் செலுத்துதல் வரவேற்கத்தக்கது.

# ஓநாயும் கொக்கும்

## (குட்டிக் கதை)

கரு: லியோ டால்ஸ்டாய் உரு: ஐயன்னா

விலாப் புடைக்க வேட்டையாடி உண்ட அந்த ஓநாயின் தொண்டையில் முள்ளொன்று சிக்கிக் கொண்டது. எவ்வளவோ முயன்றும் முள் அகன்ற பாடில்லை. வேதனையோ தாங்க முடியவில்லை.

இவ்வாறு தவித்துக்கொண்டிருந்த அந்த ஓநாயின் பார்வையில் கொக்கு ஒன்று பட்டது.

கொக்கைக் கண்டதும் ஓநாய்க்குப் பெரும் தெம்பு உண்டானது. அதன் நீண்ட சொண்டால் முள்ளை எளிதாக எடுத்து விட முடியும் என்று ஓநாய் உறுதியாக நம்பியது.

''நண்பா'' என அன்போடு அழைத்தது. விபரம் புரியாமல் கொக்கு ஓநாய் அருகில் சென்றது.

''நண்பா என் தொண்டையில் இறைச்சி முள் ஒன்று சிக்கி இருக்கிறது. இதை எடுத்து உதவி செய். உனக்கு நல்ல பரிசொன்றைத் தருகிறேன்'' என்று ஓநாய் கூறியது.

ஓநாயின் பரிவு கொக்குக்கு அக மகிழ்வை ஏற்படுத்தியது. வாயைத் திறக்கச் சொல்லி தன் சொண்டால் முள்ளை எடுத்துவிட்டது.

முள்ளை எடுத்த பின் தயக்கத்தோடு கொக்கு,

''நண்பா நல்ல பரிசொன்று தருவதாக கூறினாயே, அதைத் தந்தால் போய் விடுவேன். நேரமாகிறது'' என்று கேட்டது. அதை கேட்ட ஓநாய், கொக்கை பார்த்து நையாண்டித் தனமாகச் சிரித்து விட்டு,

''என் தொண்டையில் உன் சொண்டை விட்டும் நீ உயிரோடு என் முன் நிற்கின்றாயே அதுவே நான் கொடுக்கும் நல்ல பரிசல்லவா?

என்றதும், கொக்கு சொல்லாமல் கொள்ளாமல் பறந்துவிட்டது.

# கடிதம்

*

- அக்குறணை ஹரீரா அனஸ் -




காலமுகம் கழுவிவிட்டு துவாயை லாவகமாக விரித்து முகத்தில் ஒற்றி ஒற்றி எடுத்து முகத்தைத்துடைத்தாள் நிவேதிகா.

துவாயை ஸ்கிறீனில் போட்டாள். ஹெயா பிறஷை எடுத்து தலையை வாரினாள். ஜீன்ஸை எடுத்து அதனுள் புகுந்தாள். ரீஷேட்டுக்குள் நிவேதிகா நுழைந்தாள். ஷூவுக்கு தோதுவான சொக்ஸ் அணிந்தாள். சப்பாத்துக்களை எடுத்து மாட்டினாள். ஹான் பேக்கை எடுத்துக் கொண்டு ரூமை மூடி விர்...... ரென வெளியேறினாள்.

சிரிப்பும் கலகலப்புமாக கொழும்பு வாழ்க்கை என்னவாய் அவளை மாற்றி விட்டது. அந்தக் கொம்பியூட்டர் நிறுவனத்தில் பயிற்சி பெறத்தொடங்கியதில் இருந்து நிவேதிகா வெகுவாக மாறி விட்டாள். யாழ்ப்பாணத்தில் இருந்து மூதன் முதலாக நிவேதிகாவையும் அண்ணன் சதீஸ்வரனையும் அப்பாவும் அம்மாவும் கூட்டிக் கொண்டு வரும் போது இருந்த நிவேதிகா வேறு. இப்பொழுதுள்ள நிவே வேறு. சதீஸ்வரனும் தனது தங்கையின் இந்த நாகரிக மாற்றத்தைக்கண்டும் காணாதது மாதிரி ஆகிவிட்டான். அவனுக்கும் எங்கேபடிப்பு- பொழுது போக்கு என்று பிஸியாகிவிட தங்கை பற்றிச்சிந்திக்க எங்கே நேரமிருக்கிறது. காலையில் வீட்டைவிட்டுப் போனால் மாலையில் தான் இருவரும் திரும்புவார்கள், படிப்பில் நிவேதிகா கெட்டிக்காரி, என்வேதான் அப்பா வெளிநாட்டில் இருந்து அவ்வளவு செலவழித்துப் படிப்பிக்கிறார், அம்மாவும் இன்னொரு தங்கையும் உறவினர்களோடு யாழ்ப்பாணத்தில்.

மாலையில் வீட்டுக்கு வந்தாள் நிவேதிகா, கதவைத்திறக்கும் போதே ஒரு கடிதம், கனமாய் இருந்தது, தனது மேசையில் வைத்தாள், இவ்வளவு நேரமும் இறுக்கிவைத்திருந்த உடம்பின் நெருக்கத்தை நைற்றி கொண்டு விடுவித்தாள். ஃபிறிஜ் திறந்து ஒரு அப்பிள் எடுத்து நறுக்கி உண்டாள். ஒருசிஸ் சிலைஸும் மூன்று க்றீம் கிறைக்கர் பிஸ்கட்டும், ஒரு கப் ஒறேஞ் ஜுஸுமாய் இரவு உணவை இன்று நேரத்தோடு முடித்தாள். கதவை மூடினாள், அண்ணனிடம் வேறு சாவி இருக்கிறது. வரும் போது வந்து அவன் தனது அறையில் தூங்குவான், வந்து ரீ வியை ஒன் பண்ணினாள். ஏதோ அலுப்பாக இருந்தது. ஒஃப் பண்ணிவிட்டு லைற்றையும் அணைத்தாள். பெட் லைற்றைப் போட்டுவிட்டு அந்தக் கனமான கடிதத்தைப் பிரித்தாள். அது அம்மாவின் கையெழுத்து. இப்படித் தெரிந்திருந்தால் எப்போதோ உடைத்திருக்கலாம். எண்ணினாள். மனம் நிறையச் சந்தோஷம். அந்த மஞ்சள் ஒளியில் அவளின் மஞ்சள் முகம் பிரகாசமாய் ஒளிர்ந்தது. எதிரே ட்றெஸிங் டேபிள் கண்ணாடி

யில் அவள் அழகுப்பதுமையாகக் கட்டிலில் கிடந்தாள். என்னை இவ்வளவு அழகாகப் பெத்திருக்கிறாளே அந்த உத்தமி. பத்து மாதம் என்னைச்சுமக்க என்ன பாடு பட்டிருப்பாள். எண்ணியபடியே ''அம்மா......'' பெருமூச்சு வந்தது கடிதத்தை மெதுவாய் கவர் விலக்கி எடுத்துப் பிரித்தாள் நிவேதிகா.

பட்சமுள்ள என் நிவேக்குட்டி, வணக்கமம்மா! அண்ணாச்சி எப்படி சுகமாய் இருக்கிறானா? அவனைக் கவனமாகப் படிக்கச் சொல்லு. அம்மா விசாரிச்சதென்றும் சொல்லு.

என் நிவேக்குட்டி, இந்தகடிதம் அதிகமாக உன் நினைவினில் தானம்மா எழுதுகிறேன். நேற்றுப்பின்னேரம் நல்லூர் கந்தசாமி கோயிலுக்குப் போவதற்காய் அலுமாரியைத்திறந்து எனது பச்சைச் சாறியை எடுக்கப் போன நேரம் நீ முந்தி கோயிலுக்குப் போட்டுக் கொண்டு போன சரிகைப்பாவாடை இருந்தது. அதனை அப்படியே அள்ளி எடுத்து என் கண்களில் ஒற்றி வைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதேன் நிவே.

நீ அந்தக் கால்ச்சலங்கை கட்டி இரட்டைப்பின்னல் போட்டு இந்தப்பாவாடையையும் சட்டையையும் உடுத்தால் ...என்ரை தேவதையே என்ன அழகு நீ. உன்ரை அப்பாவைப் போலத்தான் நீ என்று சொல்லாத ஆட்கள் இல்லை நிவேயம்மா, அப்பிடியே உன்ரை பேருக்கு நல்லூர் கந்தனுக்கு ஒரு அர்ச்சனையும் செய்தேன். எனக்கு நீயென்றால் உயிர் என்று உனக்குத் தெரியும். அண்ணன் தான் ஆம்பிளைப் பிள்ளை. ஆனால் நீ பொம்பிளைப் பிள்ளை. இப்ப கொஞ்ச நாட்களாக எனக்கு கொழும்பு வாழ்க்கையை நினைச்சாலே பயமாய் இருக்கு இப்பத்தைய புள்ளையள் தங்கடை. அப்பா அம்மாவின்ரை சொல்லையும் கேளாமல் எப்பிடி எல்லாம் நடக்கினம் எண்டு நினைக்கேக்குள்ள எனக்குப் பல கற்பனைகள் வருகுது. ஆனாலும் அப்பா இல்லை அவர் வெளிநாட்டிலை யெண்டு உனக்கு நல்லாத் தெரியும். அம்மா, இங்கை பொருளாதாரத் தடை நிறைஞ்ச ஒரு பிரதேசத்திலை தங்கச்சியோடை என்ன மாதிரி கஷ்டப்படுகிறன் என்ற விஷயமும் உனக்குத்தெரியும். இருந்தாலும் நீயும் உன்ரை அண்ணன் சதீஸும் எனக்கு ரெண்டு கண்கள் மாதிரி என்பதும் உனக்குத் தெரியும்.

நிவேக்குட்டி, எனவேதான் உன் அம்மா சொல்வதும் செய்வதும் உனது நன்மைக்காக என்பதும் உனக்குத் தெரியும், இங்கையென்றால் யாழ்ப்பாணத்திலை நிழல் இலுவை நட்டு வேலியை மறைச்சு அதையும் மீறி இடுகாலை செத்தை கட்டித்தான் அச்சறுக்கையாய் நாங்கள் எல்லாம் வளர்ந்தது. ஏன் நீயும் பதினாறு வயது வரையும் அப்படித்தான் வளர்ந்தனீ. இப்ப புது ஊர். புதுக் கலாச்சாரம். புது விஷயங்கள் என்று பல விஷயங்களையும் நீ அறிந்திருப்பாய். முப்பத்தேழு வருஷமாக நான் படிப்பித்த பள்ளிக் கூடங்கள் இருந்த ஊர்கள் பற்றி எனக்கு நிறையவே தெரியும் .உனக்கு இன்னும் அனுபவம் போதாது.ஆனால் உன்ரை அம்மா பழமும் தின்று கொட்டையும் போட்டவா, நிவே, என்னதான் ஆனாலும் நீ என்ரைபுள்ளை இப்ப நீ இருக்கிறது படிக்க: இது ஒரு தற்காலிகமானதே, பின்னர் நீ எங்களோடு சேர்ந்துவிடுவாய். பின்னர் எல்லோரும் ஒன்றாகவே இருக்க வேண்டி வரும். அதுதான் முறையும்.

போனகிழமை உன்ரை மாமா வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கை உன்ரை மச்சான் இன்னும் அவுஸ்த்திரேலியாவிலை தான் ஒரு பண்ணையிலை கணக்காளரா வேலை பாக்கிறானாம், எனக்கு வலு சந்தோஷம். அவனும் இங்கை யாழ்ப்பாணத்திலை பிறந்து வளர்ந்தவன். அவனுக்குச் சரியான தமிழ்பற்று, அதோடை எங்கடை கலாச்சாரத்தைத் தான் அவன் அதிகமா விரும்புறவன்.

இப்ப சொன்னால் என்ன அவனைத் தான் உனக் கென்று எங்கள் எல்லோருக்கும் எப்போதிருந்தே மனம் வாக்கும் குடுத்திருக்கிறம். சாடை மாடையாய் உனக்கும் முந்தியெல்லாம் நாம் ஞாபகப் படுத்தியும் இருக்கிறேன். இப்போதும் ஞாபகப்படுத்துகிறேன்.

எங்கடைகலாச்சாரம் தனித்துவமானது. நிவேக்குட்டி அதிலை ஒருத்தனுக்கு ஒருத்தி என்கின்ற பண்பு ஒரு அளப்பரியது. இதை நீ எப்போதும் மனத்தில் வைத்திருப்பதற்காக உனக்கு நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

என்ன இது அம்மா என்ன வெல்லாமோ எழுதுகின்றாவே என்று நீ யோசிப்பதும் எனக்கு விளங்காமல் இல்லை. நீ என் பிள்ளையல்லவா அது தெரியாதா எனக்கு?

நிவே, இதெல்லாம் எழுதுவதற்கு ஒரு காரணமிருக்கம்மா. போன ஞாயிற்றுக் கிழமை சிவப்பிரகாசம் பெரியப்பா வீட்டிற்குப் போன நேரம் உவன் சதீஸ் போட்ட கடிதம வந்து இருந்தது. வெள்ளிக்கிழமை வந்தது என்று சொன்னார்கள். அவன் லேசாய் உன்ரை நடை உடைகளைப்பற்றி எழுதியிருந்தான். அண்ணா சும்மா எழுதுகிறவாக்கில் எழுதினவிஷயம் என்னை அப்படியே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. என்ரை புள்ளை அப்பிடிச் செய்யுமா என்று யோசித்தேன். ஆனால் ஒரு மனிதனைக் கெடுப்பதும் அவனை நல்லவனாக்குவதும் அவன் வாழும் சூழல்தான் என்று எவ்வளவு அழகாகப்படித்திருக்கிறோம் படிப்பித்துமிருக்கிறோம். நீ இப்பொழுது சாறி உடுப்பதில்லை என்ற வசனத்தின் ஒவ்வொரு எழுத்தும் என்னைக் குத்திக் கொண்டிருக்க - ஜீன்ஸும் ரீஷேட்டும் தான் போட்டுக் கொண்டு கிளாஸ் போகிறாய் என்ற உன் அண்ணாவின் எழுத்தைப் பார்த்ததும் அதிர்ந்தே போய் விட்டேன். இன்னும் கொஞ்ச நாட்களில் முடியையும் கட்டையாக வெட்டிவிடுவாய், பின்னரெங்கேயம்மா உன்னிடம் தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம் என்பதை துளிக்குக்கூடக் காணமுடியாமல் போய் விடும். நாங்கள் நல்ல குலத்தில் பிறந்தவர்கள் என்பதை நீ மறந்து விடாதே. நிவே நாங்கள் தீந்தமிழ்க்குலம்.

என் நிவேக்குட்டி. அண்ணாவின் கடிதத்தை வைத்துக் கொண்டு உன்னை நான் கற்பனை செய்து பார்த்தேன் நீ எப்படி இருப்பாய் என்று. கவர்ச்சி என்பது வெளிவேஷமும் பேராபத்தும் விளைவிக்கக் கூடியது. உனது அழகான உடம்புக்கு இறுக்கமான உடையும் அணிந்து விட்டால் ஆண்களின் கண்களுக்கு நீயே நெருப்பை மூட்டுகிறாய் பின்னர் அழிந்து போவது நீதான். நீ இப்போது ஆங்கிலம் படிக்கிறாய் பல புத்தகங்களையும் வாசிப்பாய், முற்போக்கு என்பது ஆடை அணிகலனில் அல்ல என்பதையும் புரிந்து கொள். என்ன நிலை வந்தாலும் எங்கள் சமூக, கலாச்சார விழுமியங்களைத் தவற விடுபவனை ஒரு சமூக, சமயப்பற்றுடையவனாகக் கருதமுடியாது. உனக்கு சீக்கியர் வம்சத்தைத் தெரிந்திருக்கும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இந்தியா ஆமி வந்த போது அந்தப் படையில் இருந்ததை நீ பார்த்திருப்பாய், அவர்களின் கலாச்சார விழுமியங்களில் மிகவும் பிரதான மானது தான் தலைப்பாகையும், தாடியும். என்னதான் உயர்பதவி வகித்தாலும் இந்த தங்களின் கலாச்சார விழுமியங்களுக்கு பங்கம் வராமல் பாதுகாத்துக்கொள்வார்கள், என்றால் பாரேன். அவ்வளவு உறுதி அவர்கள்.

ஆங்கிலேயப் பாணி போன்றதான சுழிசானும் - ரீஷேட்டும் அணிவதை நான் முற்றாக வெறுக்கிறேன். அழகான சாறிகள் எத்தனை உன்னிடம் இருக்கிறது. அவைகளை அணிந்து கொள். தினமும் காலை வேளையில் இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டு விபூதியைத் தரி, சந்தணப் பொட்டும்

வைத்துக் கொள், உன் அழகான அடர்ந்த நீளமான கூந்தலைப்பின்னி சடையில் கோயில் பிரசாதத்தில் பூவையும் கேட்டு வாங்கி வைத்துக்கொள்.

அதோடு பயபக்தி வருவதற்காக வேண்டி வீணான பொழுது போக்குகளைக் தவிர்த்துக்கொள். அதோடு ஆண் நண்பர்களையும் நீ கடுமையாகத் தவிர்க்க வேண்டும். நிவே "விட்டில்" சுவாலையில் விழுந்தாலும் சுவாலை" விட்டிலில் பட்டாலும் செத்துக் கருகிப் போவது "விட்டில்" தான் என்பது உனக்கு நான் தான் சொல்லித் தெரிய வேண்டு. மென்பதில்லை. நிவே உன் அம்மாவின் இந்தக்கடிதம் மிகவும் முக்கியமானதும் நீ கடைப்பிடிக்க வேண்டிய செய்திகளையும் தாங்கி வருகிறது.

இதில் எதனையும் நீ உதாசீனம் செய்வதை நான் வன்மையாக வெறுக்கிறேன்; உனது பெற்றோர்கள் உனது நன்மையைத் தவிர வேறெதையும் நாடமாட்டார்கள், அதோடு நீ ஒரு கலாச்சாரப் பிடிப்புள்ளவளாக பக்குவப்பட வேண்டும். தமிழுக்கும் அதன் பேணுதலுக்கும் எங்காவது பிறழ்வு ஏற்படும் போது அதனை எதிர்க்கக்கூடியவளாக நீ பக்குவப்படவும் வேண்டும். இவ்வளவு விசயங்களை உனக்கு விளக்கி விட்டேன்.

நிவேக்குட்டி நீ என் பிள்ளை. என் செல்வ மகள். எங்கே உன் பஞ்சுக் கன்னத்தைக்காட்டு அம்மா முத்தம் கொடுப்பதற்கு.

இங்ஙனம், உன் உயிர் அம்மா.

கடித்தத்தின் வரிகள் முடிந்து போய் விட்டன. நிவேதிகா விற்குதொண்டையில் ஏதோ கட்டியாக அடைத்தது.

நாளை மறுநாள் கத்தரிக்க எண்ணிய தனது நீளமான அடர்ந்த கார்குழலை தனது இரண்டு கைகளாலும் அள்ளி எடுத்து மார்பின் மீது போட்டுக்கொண்டு நெஞ்சோடு சேர்த்து அழுத்தி அணைத்தாள்.

"அம்மா... அம்மா...... என்று கேவிக் கேவி அழுதாள்.

"மாட்டேனம்மா...... எங்கள் கலாச்சாரத்தை எங்கள் பண்பாட்டை எங்கள் தமிழ் வழிமுறையைக் கைவிடமாட்டேனம்மா..... நான் கைவிடமாட்டேனம்மா........." கண்ணீர் வழிந்து ஒடியது. நிவேதிகா அம்மாவின் அந்தப்புத்திமதியால் புதியவளாய்ப் பிறந்தாள். ஆங்கில மோகத்தை தனது நெஞ்சை விட்டு மெல்ல மெல்ல அகற்றினாள்.

அழுது களைத்தவள் அன்று தூங்கும் போது நேரம் பன்னிரண்டரை மணி. காலைக்கதிரவன் கண்விளித்த வெள்ளிக் கிழமைப் பொழுது. அண்ணா இன்னும் எழும்பவில்லை அன்று போயா விடுமுறை வேகமாக எழுந்து பெட்சீட் மடித்தாள் தலையணை வைத்தாள், பெட்டை ஒழுங்கு படுத்தினாள். பாத்ரூம் போய் பல்துலக்கி தலைமுழுகினாள். சாறிகபேட்டைத் திறந்தாள். இளம்மஞ்சள் நிறமான சாறியை எடுத்தாள் அழகுதேவதையானாள்.

தமிழ்ப் பெண்ணானாள். அர்ச்சனைத் தட்டில் பூக் கொய்து எடுத்துக் கொண்டு அம்மாவை நினைத்தாள்.

நிவேதிகா கோவிலுக்குப் போகிறாள்.

நிவேதிகா புதியவளாயும் - ஒரு தமிழிச்சியாயும் ஆனாள்.

---

அன்பு செய்தால் அல்லல் தீரும்: அல்லல் தீர்ந்தால்
அமைதி பெருகும்: அமைதி பெருகினால் அதுவே சுவர்க்கம்

— பெ. துாரன்

# கைப்பிடிக்குள் சூரியன்

## ★ நாளைய தேவை ★


- சு. முரளிதரன் -

( விரிவுரையாளர், அரசினர் ஆசிரியர் கலாசாலை - கொட்டகலை )


பூமியில் உயிர்கள் தொடர்ச்சியாக வாழக் கிடைத்த வரப்பிரசாதமாக சூரியன் திகழ்கின்றது. நிலக்கரி கலட்டு எண்ணெய், நீர்மின் உற்பத்தி, காற்று மின்னுற்பத்தி முதலான இன்னோரன்ன சக்திகளின் உற்றுக்கண்ணாக சூரியன் விளங்குகின்றது. பெற்றோல் முதலான சுட்டு எரிபொருள் எண்ணெய்கள் அருகிச் செல்கின்றன. எனவே அதன் விலையேற்றம் தவிர்க்கப்பட முடியாததாகும். அணுச்சக்தியைப்பயன்படுத்தி சக்தித்தேவையை ஈடுசெய்து கொள்ளலாமென்றாலும் அதனால் ஏற்படும் அனர்த்தங்களை கவனத்திற் கொண்ட பல நாடுகள் பரீட்சார்த்தமாகவேனும் அமுல்நடத்த தயங்குகின்றன. இந்நிலையில் சக்தித் தேவைக்கு உகந்த மாற்றுவடிவம் சூரியனே என ஏற்றுக் கொண்டதை அடுத்து சூரியனைப்பயன்படுத்தும் முயற்சிகள் வெகுவாக மேலெடுத்துச் செல்லப்படுதலை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உலகெங்கும் தாராளமாகக் கிடைக்கும் சூரியவொளியை மனிதனின் தேவைக்கும் அபிவிருத்திக்கும் உச்சமாக பயன்படுத்திக்கொள்ளும் சாத்தியப்பாடுகள் குறித்து விஞ்ஞானிகள் முழுமூச்சாக உழைக்கின்றார்கள். பகலில் அல்லது கோடைகாலத்தில் மட்டும் கிடைக்கும் சூரிய சக்தியை இரவிலும் மாரிக்காலங்களிலும் தொடர்ச்சியாக பயன்படுத்த முடியாதா? என்ற வினாவுக்கு தற்போது விடை தெரியவந்துள்ளது. அதன் பலனாக இன்று விருத்தி செய்யப்படும் நுட்பங்கள் சூரிய சக்தியை பல்வேறு சக்திவடிவங்களாக மாற்ற உதவியளிக்கின்றன,

மின்காந்த கதிர்வீசலாக சூரியனின்று வரும் சக்தி, சூரியவொளிக்கு செங்குத்தான புவிப்பரப்பை அடையும் போது ஒரு சதுர மீற்றரில் 1.36 KW சக்தி விழக்கூடியதாகவுள்ளது. ஆனால் இவ்வாறு கிடைக்கும் சக்தியில் 30% வீதம் பயன்பாடின்றி உடனடியாக அண்டவெளிக்கு தெறித்து விடுகின்றது. 47% சக்தி புவி மேற்பரப்பையும் பொருட்களையும் வெப்பமாக்கிவிட்டு மீண்டும் அண்டவெளிக்கே மீள்தெறிப்படைந்து சென்று விடுகின்றது. எஞ்சிய சக்தியில் 23% சக்தி நீரை ஆவியாக்கி மழை பெய்தல் முதலான செயன்முறைகளுக்கு பயன்படுகின்றது. 0.5% க்கும் குறைவான சக்தியே தாவரங்களின் ஒளித்தொகுப்பு (உணவு தயாரிப்பு) வளி அசைவு, கடலலை உருவாக்கம் முதலானவற்றுக்கு உபயோகமாகின்றது. எனவே சூரியன் தாராளமாக அள்ளிவழங்கும் சக்தியை பூமி உச்சமாக பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றதல்லவா? எனவே இவ்வாறு விரையமாகும் சக்தியைப்பயன்படுத்துவதற்கு தற்போது மூன்று வகை தொழில்நுட்ப உபாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவையாவன:-

1. ஒளி - இரசாயன மாற்றம்
2. ஒளி - மின் மாற்றம்
3. ஒளி - வெப்ப மாற்றம்

ஒளி - இரசாயன மாற்றம் பிரதான மாக தாவரங்களில் ஒளித்தொகுப்பு நடைபெறும் போது நிகழ்கின்றது, தாவரத்திலுள்ள பச்சையம் சூரிய ஒளிச்சக்தியை காபனீரொட்சைட், நீர் என்னும் இரசாயன மூலக் கூறுகளைப் பயன்படுத்தி குளுக்கோசை உருவாக்கி அதற்குள் இரசாயன சக்தியாக சேமித்து வைக்கின்றது. ஒளி - மின் மாற்றம் இன்று சூரிய மின்கலங்களாக நடை முறைப்பாவனைக்கு வந்துவிட்டன. விண்வெளிக்கலன்கள் தமது இயக்கத் துக்கு தேவையான சத்தியை இம்முறை யிலேயே பெற்றுக்கொள்ளக் கூடியதாக வடிவமைகக்ப் பட்டுள்ளன. மூன்றா வதான ஒளி - வெப்பமாற்றமென்பதே இக்கட்டுரையில் சற்று விரிவாக நோக் கப்படவிருக்கின்றது.

சூரியனின்று வரும் IR கதிர் எனப் படும் செந்நிறக் கீழ்க்கதிர்கள் வெப்பத் தைக் கொண்டுவருகின்றன. இவ்வெப் பத்தைப் பயன்படுத்தி உலர்த்துதல் பண்டையகாலத்திலிருந்தே நடைமுறையி லுள்ளது. இதனைத்தவிர தற்போது நீரை வெப்பமாக்குதல், அறைகளை வெப்பமாக்குதல், காய்ச்சி வடித்தல் போன்ற பல்வேறு செயன்முறைகளுக்கு பயன்படுத்தல் பரவலாகி வருகின்றது. இவ்வாறான வெப்பத்தேவைகளுக்காக சூரிய சக்தியை சேகரிக்கும் சாதனங் களை (Solar Collectors) இருவகையாக பிரிக்கலாம்.

1. தட்டைத் தட்டு சேகரிப்பான்கள் (Flatplate Collectors)
2. குவிக்கும் சேகரிப்பான்கள் (Focusing Collectors)

தட்டைதட்டு சேகரிப்பான்கள் குறைந்தளவு வெப்பம் தேவைப்படும் செயன்முறைகளுக்கும் குவிக்கும் சேகரிப் பான்கள் கூடியளவு வெப்பம் தேவைப் படும் செயன்முறைகளுக்கும் பயன்படுத் தப்படுகின்றன.

ஏறக்குறைய $100^0{}_c$ யையொட்டிய வெப்பநிலைத் தேவைகளுக்கு பயன்படும் தட்டைத்தட்டு சேகரிப்பான்கள் மிக எளிய அமைப்பைக் கொண்டன. சூரிய வொளிக்கு நன்கு மேற்காட்டப்படக் கூடியதான கருமை பூசப்பட்ட உலோ கத்தட்டு, அதனோடு நெருக்கமாக வலையமைப்பில் பொருத்தப்பட்ட நீர் பாயும் குழாய்கள் என்பவற்றை பிரதானமாகக் கொண்டிருக்கும். கருமை மேற்பரப்பால் உறிஞ்சப்படும் சூரியவெப் பம் உடமையாக தட்டை சூடாக்கி அதனோடு ஒட்டி ஓடும் குழாயினுள் ருக்கும் நீரைச்சூடேற்றுகின்றன. அந்த குழாய்கள் தகுந்த காவலிகளினால் (Insulators) படலிடப்பட்டு பாதுகாக் கப்பட்ட நீரானது வீட்டின் பல்வேறு தேவைகளுக்குப்பயன்படுத்தப்பட முடி யும். விடுதிகள், ஹோட்டல்கள், வைத் தியசாலைகள் போன்றவற்றிலும் இதன் பயன்பாடு தற்போது வெகுவாக வேண் டப்படுகின்றது.

குவிக்கும் சேகரிப்பான்கள் குழிவாழ, குவிவில்லை போன்றன பயன்படுத்தப் பட்டு ஏறக்குறைய $350^0{}_c$ வரையிலான வெப்பநிலை உயர்வை ஈட்டிக்கொண்டு- அதனூடாக நீராவி இயந்திர இயக்கம், மின்பிறப்பாக்கம், தொழிற்சாலை இயந்திர இயக்கம், குளிர்சாதன பதனிடு வேலைகள் போன்ற பாரியவேலைகள் நிறைவேற்றப்படக்கூடியதாக இருக்கின் றது. இவ்வாறு குவிக்கும் சேகரிப்பான் கள் பாரிய அளவிலான பரவளைவாடி அல்லது குவிவில்லை நிர்மாணிப்பு காரணமாக அதிகபொருட்செலவுக்கு ரியன. அதுமட்டுமல்லாமல் சூரியனின் நகர்வுக்கேற்றவண்ணம் இதனை சுழற்று திசைப்படுத்த வேண்டியுமிருக்கும்.

மேற்கூறிய வழிமுறைகளினால் பெறப்பட்டு பயன்படுத்தப்படும் சக்தி யானது சூரியனுள்ள வேளைகளில்

மாத்திரமே பெற்றுக்கொள்ளும் சாத்தியமுள்ளது. ஆனால் சூரியன் மறைந்த போதிலும் அதன் சக்தியை தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ள சூரியசக்தியை சேமித்து பயன்படுத்தும் நுட்பங்கள் குளித்து தற்போது கவனம் செலுத்தப் படுகின்றது. அதற்கான நுட்ப முறைகள் தற்போது விருத்திசெய்யப்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிட்டதைப்போல நீரைவெப்பமாக்கி அவ்வெப்பமானநீரை காவலிட்டு சேமிப்பதூடாகவும் சூரியனால் வழங்கப்படும் வெப்பத்தை உறிஞ்சி வைத்திருக்கக்கூடிய பொருட்களை பயன்படுத்துவதும் இதன்போது கையாளப்படுகின்றன,

தற்போது இவ்வாறான வெப்ப உறிஞ்சல் சேமிப்புக்கு சோடியம்சல்பேற் டெக்காஹைறதரேற்றுபோன்ற இரசாயன பதார்த்தங்களை பயன்படுத்தல் நடைமுறைக்குள்ளாகிவருகின்றன. நீரில்சேமிப்பது, மின்னிரசயனமாக சேமிப்பது, மின்கலங்களில் சேமிப்பது, பொறிமுறை வழியாக சேமிப்பது, இரசாயனமுறையில் சேமிப்பது, அழுக்கப்பட்ட வளிக்குள் சேமிப்பது, நேரடி வெப்பமாக சேமிப்பது, உயிரியல் முறையில் சேமிப்பது முதலியன தற்போது சாத்தியமாகும் நிலைகளில் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகள் உலகெங்கும் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக நவீன தொழில்நுட்ப சாதனங்கள் உருவாக்கப்பட்டு பாவனைக்கு விடப்படுகின்றன.

சூரியனின்று குறைந்த வெப்பத்தை பெற்றுக்கொண்டு நீரைத்சூடாக்குதல், காய்ச்சி வடித்தல், அறைகளை வெப்பமாக்குதல் அறைகளை குளிராகுதல், உலர்த்துதல் போன்றவற்றுக்கு தகுந்த சாதனங்களும் சூரியனிலிருந்து நடுத்தர அளவில் வெப்பத்தைப் பெற்றுசமைக்கும் அடுப்புகள் குளிர்சாதனப்பெட்டியியக்கம், நீராவியில் இயங்கும் இயந்திரங்கள், நீரிறைப்பான்கள், போன்றவற்றையும் கூடிய வெப்பத்தைப் பெற்று வெப்பமின்பிறப்பு இயந்திரங்கள் சூரிய உலைகள், பாரிய இயந்திரங்கள் ஆகியனவற்றையும் இயக்கக்கூடியதாக வுள்ளது.

வருங்காலத்து தலைமுறைகள் சுவீட்சமாக வாழ சூரியனைப்பயன்படுத்தி இயங்கும் சாதனங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டியதன் தேவை மேலோங்கி உள்ளது. அடுத்த நூற்றாண்டு சூரியனை வெற்றி கொண்ட சகாப்தமாக மிளிர வேண்டும்.

## கனடாவில்
## உலகத் தமிழ் மாநாடு

உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழத்தின் 6 ம் மாநாடு இவ்வருடம் ஆகஸ்ட் 19, 20, 21, ம் திகதிகளில் டொரொன்டோ நகரில் நடைபெற உள்ளது.

உலகின் அனைத்துப் பாகங்களிலும் வாழும் தமிழ்மக்களின் பண்பாடு பிரச்சனைகள் என்பவற்றை ஆய்வு செய்யும் முகமாக கூட்டப்படும் இம்மாநாடு இதற்குமுன், தமிழ்நாடு, மலேசியா (இருதடவைகள்) மொறிசியஸ், அவுஸ்ரேலியா ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளது.

மாநாட்டினை ஒட்டி, சிறுகதை. கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. அத்துடன் பழந் தமிழ் நூல்கள், தமிழ் ஏடுகள் என்பனவும் மறுபிரசுரம் செய்யப்படவுள்ளன.

தமிழ்ப் பண்பாட்டை கனடா மக்களுக்கு உணர்த்தும் வகையில் அலங்கார ஊர்திகளின் பவனி, பரத நாட்டியம், கும்மி, நடனம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

நன்றி! கோபுரம்
(இந்து சமய கலாச்சார திணைக்கள வெளியீடு)

# "அகிலம்"

# அகிலமெங்கும் அகமகிழ்ந்து

## வளர்ச்சிபெற ஆசிவாழ்த்துக்கள்!

''அகிலமே நீ அகிலமெங்கும்
அகங்கையில் இருப்பாயே
அகடியம் யாவும் ஒழித்து
அகவையால் அறிவு வளர வைப்பாய்
அகைதல் ஆகாமல் நீ
அகிலமெல்லாம் வலம் வருக''

''அகோராத்திரம் உன்னை ஒவ்வொருவர்
அக்கரம் பல தந்து உதவ
அக்காணியுடன் அகிலமெங்கும் வரவும்
அங்கணனும் தேவர்களும் புகழ
அங்கணிமங்கையிடம் வரம் பெற்றகிலமே
அங்கிகரி எனது வாழ்த்துக்களை''

### சொற்பதம்

அகங்கை - உள்ளங்கை
அகடியம் - அநீதி
அகவை - உள் அடங்கியிருக்கும் பொருள்
அகைதல் - தாமதித்தல்
அகோராத்திரம் - பகலும் இரவும்
அக்கரம் - எழுத்து
அக்காணி - பெரும் உடல்
அங்கணன் - சிவபெருமான்
அங்கணி - உமாதேவியார்
அங்கிகரி - ஏற்றுக்கொள்

அகிலப்பிரியை,
ஞா. கிருஷாந்தி
பருத்தித்துறை

# செய்யுளுக்கு பொருள் எழுதும் முறை

K. சந்திரிகா
ஆசிரியை, இந்து சிரேஷ்ட பாடசாலை

இன்று கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் முதல் பட்டப்படிப்பு வரை செய்யுட்களுக்கு பொருள் எழுதும் ஒரு அம்சத்தை கொண்டு விஞாப்பத்திரங்கள் அமைகின்றன. செய்யுள்களுக்கு பொருள் எழுதும் போது சில நெறிகளைக்கடைப் பிடிக்க வேண்டியுள்ளது.

செய்யுளின் கருத்து முழுவதையும் திரட்டி இலகுவில் விளங்கக்கூடிய உரை நடையில் எழுதுவதே செய்யுளுக்கு பொருள் எழுதுதலாகும். செய்யுள் நடையிலிருப்பதை உரைநடைக்கு மாற்றும் பொழுது அதன் நடை உருவம் என்பன மாறுபட்டு வேறான ஒரு தன்மை அடைகிறது.

செய்யுளுக்கு பொருள் எழுதும் போது அவதானத்தில் கொள்ள வேண்டிய சிறந்த தன்மைகளாவன;

1. பொருள் மாறாது இருக்க நடைமாறுகின்றது. அதனால், பொருள் எழுதும் பொழுது செய்யுள் நடைத்தன்மையைக் கையாளாமல் உரைநடையாகவே எழுதல் வேண்டும்.

2. செய்யுளில் உள்ள பொருள் முழுவதும் கொண்டதாக அமைய வேண்டும். அதிலுள்ள பொருளில் ஒரு பகுதி விடப்பட்டாலும் அது சிறந்த பொருள் கொண்டதாகக் கருதப்பட மாட்டாது. ஆனால், முக்கியமான பொருளுக்கு தேவையில்லாத வர்ணனை, அடைமொழி ஆகியவற்றை விட்டுவிடலாம்.

3. பாடலை கவிஞன் படைத்த உருவம், அதை முழுமையாகப் பார்த்து அனுபவித்துப் பொருள் விளங்கி எழுத வேண்டும். அதை அங்கம் அங்கமாகப் பிரித்தெடுத்தால் அதன் உருவம் விகாரப்பட்டுவிடும். ஆதலால், செய்யுளை அடி அடியாகவோ தொடர் தொடராகவோ பிரித்துப் பார்த்துப் பொருள் எழுத முடியாது. அப்படிச் செய்தால் செய்யுளின் பொருள் கெட்டுவிடும்.

4. செய்யுளைக் கருத்துக்கியைய வசன முறைப்படி பொருளை ஒழுங்கு செய்து எழுதுதல் வேண்டும்.

5. பொருளை விளக்குவதற்காக சொற்களையோ சொற்றொடர்களையோ சேர்த்து சொல்லக்கூடாது.

6. புலவர் இயற்றும் பாடல்களில் இலக்கியச் சொற்களே இடம்பெறும். அவற்றிற்குப் பொருள் எழுதும் பொழுது இலக்கியச் சொற்களுக்குப் பதிலாக எவரும் இலகுவாக விளங்கிக் கொள்ள கூடிய உலகவழக்கிலுள்ள சொற்களைப் பிரயோகிக்க வேண்டும்.

7. செய்யுள் அதற்கேற்ற நடையில் எழுதப்பட்டிருக்கும் அதற்கு உரைநடையில் பொருள் எழுதும் பொழுது வசன நடைவழக்கில் மாற்றி எழுத வேண்டும்.

எந்தவொரு செய்யுளுக்குப் பொருள் எழுதும் முன் ஆறுதலாக வாசித்து அதன்

பொதுவான பொருளை அறிந்து கொள்ள வேண்டும், பொருள் அறியும் வரை திரும்ப திரும்ப செய்யுளை வாசிக்க வேண்டும். பாட்டின் கருத்தை அறிய கஷ்டமாக இருக்கும் பொழுது சொற்றொடர்களை புணர்ச்சி நீக்கி பார்ப்பதாலும் பொருள் பொருத்தமுறச் சொல் சொல்லாக பிரித்து பார்ப்பதாலும் கருத்தை விளங்கி பொதுவான பொருளை கிரகித்துக் கொள்ளலாம்.

பாட்டிலுள்ள வினைமுற்றுக்களை ஆதாரமாக எடுத்துக் கொண்டு வினாக்களை எழுப்பி, எழுவாயையும் பிறவற்யும் அறிந்தும் பொதுவான பொருளை அறிந்து கொள்ளலாம். அத்தோடு, கருத்தை அறியமுன் அரும்பதங்களின் பொருளைத் தெரிந்து கொள்ளவேண்டும். அரும்பதங்களின் அர்த்தத்தை, முன் பின் தொடர்பு நோக்கி அப்பதங்களின் அர்த்தங்களை உத்தேசமாக ஊகித்தறிந்து கொள்ளலாம். பகுப்பதங்களானால் அவற்றின் பகுதியைக் (அடிசொல்லை) கொண்டும் அர்த்தத்தை அறிந்து கொள்ளலாம்.

பொதுவான பொருளை அறிந்த பின்னரே அதன் உவமை உருவகம் போன்ற அணிகளையும் அடைமொழிகளையும், வேறு பொருள்களையும் செய்திகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

செய்யுள் பெரிதாக இருப்பின் பொருள் முழுவதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாதவிடத்து அதில் கூறப்பட்ட பலவகையான கருத்துக்கள் முழுவதையும் ஒழுங்காகவும் தவறவிடாமலும் பொருள் எழுதுவது கஷ்டமான காரியம். ஆதலால், பாட்டிலுள்ள பொருள்களை அம்சங்களாகக் குறித்துக் கொண்டு அவற்றைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒழுங்குப்படுத்தி பொருள் எழுதலாம்.

சாதாரண சொற்களில் தெளிவாக பொருள் கெடாத வகையில் பொருள் எழுதப்படல் வேண்டும். பல வசனங்களில் கூறப்பட்டவற்றைத் தொகுத்துச் சுருக்கி ஒரு வசனத்தில் எழுதலாம். நீண்ட வசனங்களைப் பல சிறு வசனங்களாக அமைக்கலாம். ஆனால், செய்யுளிலுள்ள முக்கிய கருத்துக்கள் ஒன்றையும் விட்டுவிடக் கூடாது பொருளை விளக்க விளக்கவுரை அல்லது குறிப்புரை தேவைப்படக்கூடாது. சுருங்கக் கூறும் போது, செய்யுளின் பொருள் முழுவதையும் செய்யுளின் துணை சிறிதுமின்றி விளங்கக் கூடியதாக இலகுவான அழகான வசன நடையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதுவதே நல்ல பொருளுரையின் சிறந்த இலட்சணமாகும். பொருள் ஒரே தடவையில் திருத்தமாக எழுதுவது கஷ்டமாக இருக்கலாம். அப்படி நேருமிடத்து முதலில் பரும்படியாக எழுதித் திருத்தி நல்ல பொருள் எனத் திருப்தி ஏற்பட்ட பின் அதைச் சுத்தமானதாக எழுதிக் கொள்ளலாம்.

எழுதிய பொருளை வாசித்து செய்யுளோடு ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும். முக்கியமான பொருள் ஏதாவது விடுபட்டிருந்தால் சேர்த்துக் கொள்ள வேண்டும். வசனங்கள் தொடர்பு பட்டிருக்கின்றனவா என்றும் ஒழுங்கான நடையாக அமைந்திருக்கின்றனவா என்றும் கவனித்து வேண்டிய திருத்தங்களை செய்து கொள்ளலாம்.

உதாரணமாக கவிமணி சி. தேசிக விநாயகம்பிள்ளையின் "நினைவும் முடிவும்" என்ற பாடலை எடுத்து எவ்வாறு பொருள் எழுதலாம் என நோக்குவோம்.

நினைவும் முடிவும்

"இருளு மகலும்; இரவியம் தோன்றும்
பொருவிலித் தாமரைப் பூவும் மலரும்
மலரும் பொழுதிவ் வஞ்சிறை நீங்கி
உலகி லெங்கும் உலவித் திரிந்து
பூவெழு பற்பல புதுவனங் கண்டு
நாவெழு சுவைதரு நறைமிக வுண்டு
வாழ்குவன்" என்றொரு மதுகர
மிருப்பத்

தாழ்மத வேழமொன் றாழ்கய
பிறங்கிப்
பாசிலை பூவெல்லாம் பறித்து
வீசியெறிந்து வெறிகொண்டதுவே.

முதலில் பொருள் விளங்குமட்டும் பல முறை பாடலை விளங்கிக் கொள்ள பிரித்து வாசித்து அதன் பொருளை அறியலாம். அப்படி வாசித்தும் பொருள் விளங்கவில்லை என்றால் வாழ்குவன், வெறிகொண்டது என்ற வினைமுற்றுகளை எடுத்து வாழ்குவன் என்று இருந்தது எது? அது எப்படி வாழ்குவன் என்றிருந்தது? எது வெறி கொண்டது? அது என்ன செய்தது? என்ற வினாக்களை எழுப்பி பொருள் காணலாம்.

அடுத்து அருமபதங்களின் அர்த்தம் அறிதல் வேண்டும். இதற்கு புணர்ச்சி நீக்கி விரித்துப் பார்த்தல் இலகுவாக அமையும். உதாரணமாக பொருவிலித் தாமரை = பொருவு + இல் + இ + தாமரை,

ஒப்பு இல்லாத இத்தாமரை என்றும் வன்சிறை = வன்மை + சிறை, வலிய சிறை என்றும், பாசிலை = பசுமை + இலை பசுமையான இலை என்றும், பொருள் கண்டு விடலாம்.

இதேபோல் முன்பின் தொடர்பு மூலமும் பொருள் விளங்கிக் கொள்ளலாம். உதாரணமாக இரவி: இருள் அகலத் தோன்றுவது சூரியன் - எனவே இரவி என்பது சூரியன் எனப் பொருள் கொள்ளலாம்.

பொருள் எழுதுவதற்கு முன் நுண்பொருள் அறிய வேண்டும். பொருவில் தாமரை:- அநேக இதழ்களும், பருமையும் பொற்பும், பொலிவும் உள்ளதால் பூக்களுள் சிறந்தது தாமரைப்பூ. எனவே அது பொருவில் தா ம ரை என வந்துள்ளது. இதுபோல வன்சிறை தாழ்மதவேழம் என்பவற்றுக்கு நுண் பொருள் அறிதல் வேண்டும.

பின் செய்யுளில் உள்ள அம்சங்கள் அனைத்தையும் வரிசைக்கிரமமாக குறித்தல் வேண்டும்.

1. வண்டின் நினைவு
   (i) இருள் நீங்கும் நேரம்-சூரியன் தோன்றும் காலம் தாமரைப் பூ மலரும்.
   (ii) அப்பொழுது தனது வன்சிறை நீங்கும்
   (iii) இதனால் உலகில் உலாவித் திரியலாம்-பூம்பொழில்கள் காணலாம். நாவுக்கினிய தேன் குடித்து வாழலாம்.
2. யானையின் செயல்:-
   வெறிகொள்ளல் - குளத்துள் இறங்கல் இலை பூ பறித்து வீசியெறிதல்.
3. வண்டின் முடிவு:-
   வண்டு அந்த வன்சிறையில் கிடந்து உயிரை விடுதல் (இது செய்யுளில் நேரடியாக சொல்லவில்லை எனினும் நாம் இவ்வாறான முடிவுக்கு வரலாம்)

இத்தனை அம்சங்களையும் தெளிவாக தெரிந்த பின் இப்பாடலுக்கு பொருள் எழுதினால்,

தாமரைப் பூவில் அடைபட்டுக் கிடந்த வண்டானது ''இரவு கழியச் சூரியன் உதிக்கும். அப்பொழுது அப் பூ விரியும். தான் அந்த மலர்ச் சிறையிலிருந்து வெளியேறி, உலகெங்கும் உலாவித் திரிந்து பூஞ் சோலைகளைப் பார்த்து, பூக்களிலுள்ள இனிய தேனைக் குடித்து வாழ்வேன்'' என்று நினைத்தது. ஆனால் மதங்கொண்ட யானையொன்று வெறிபிடித்து அக் குளத்தில் இறங்கி, தாமரை இலை, பூக்களை எல்லாம் பிடுங்கி வீசியெறிந்து விட்டது. அதனால், சூரியன் வந்ததும் அந்த மலர் விரிய முடியாமையால் வண்டானது அந்த கொடிய சிறையிலேயே கிடந்து மாண்டது.

இவ்வாறான இலகுவான உரைநடையில் பொருளை எல்லோருக்கும் விளங்கும் வகையில் அழகாக எழுதலாம். ●

# உணவுச் சத்துகளிலிருந்து கலங்கள் எவ்வாறு சக்தியைப் பெறுகின்றன?

உணவிலுள்ள கார்போஹைரேட், கொழுப்பு, புரதம் ஆகிய வற்றிலிருந்து சக்தி பெறப்படுகின்றது. ஆனாலும் சாதாரண தொழில் நிலையில் கார்போஹைரேட்டும், கொழுப்புமே சக்திக்காகப் பெருமளவில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

புரதம் விசேட தொழில்களான இழைய வளர்ச்சி, நொதியத் தயாரிப்பு ஆகியவற்றிற்காக முக்கியமாகப் பாவிக்கப் படுகின்றன. இருந்தும் பட்டினியால் வாடும் போது புரதங்கள் ( உடலிலிருந்து ) கூட பயன்படுத்தப் படுகின்றன. இவை மூன்றும் பெரிய மூலக் கூறுகளாகும்.

உணவுக் கால்வாயில் நொதியங்களின் துணை கொண்டு இவை சிறு சிறு மூலக் கூறுகளாக்கப்பட்டு பின் குடற்சுவரூடே உறிஞ்சப்படுகின்றன.

கார்போஹைரேட்டுக்கள் ஒரு சக்கரைட்டாகவும் கொழுப்புகள் சுயாதீனக் கொழுப்பு அமிலங்கள் (சு. கொ. அ) கிளிசரோல் (22%) α - ஒரு கிளிசறைட்கள் (6%) β - ஒரு கிளிசறைட்கள் (22%) ஆகவும், புரதங்கள் அமினோ வமிலங்களாகவும் இரு பெப்டைட்டுகளாகவும் (சிறியளவில்) உறிஞ்சப் படுகின்றன. இருபெப்டைட்டுகள் சிறுகுடற் கலங்களில் அமினோ வமிலங்களாகின்றன.

மேற் கூறிய வற்றில் ஒரு சக்கரைட்டுகளும், அமினோ வமிலங்களும், கிளிசரோல், குறுகிய சங்கிலி சு. கொ. அமிலங்களும்(10 - 12 காபன் கொண்டவை) வாயினாளத்தினூடே ஈரலுக்குக் கொண்டு செல்லப்பட்டு அனுசேபிக்கப்படுகின்றன.

ஒரு கிளிசறைட்கள், நீள் சங்கிலி சு. கொ. அமிலங்களுடன் (< 12 காபன் கொண்டவை) சிறுகுடல் கலங்களில் முக்கிளிசறைட்களாகின்றன. இவை கொலஸ்தரோல், பொஸ்போலிப்பிட், சிறிதளவு புரதம் (O. 5%) ஆகிய வற்றுடன் சேர்ந்து கைலோமைக்கிரோன்களாக்கப்பட்டு(CHYLOMICRONES) நிணநீர்க்கலன்களூடே (LYMPHATICS) குருதியுடன் சேர்க்கப்பட்டு மற்றைய கலன்களை அடைகின்றன.

ஈரலில் ஒரு சக்கரைட்டுகளான புரக்டோசும் (FRUCTOSE), கலக்டோசும் (GALACTOSE) அனுசேகம் செய்யப்பட்டு குளுக்கோசு அல்லது சக்தி அல்லது பிற பொருள்கள் உண்டாகின்றன,

குளுக்கோசிலிருந்து ஈரல் கிளைக்கோசனைத் தயாரிக்கின்றது. அதே நேரத்தில் குளுக்கோசு வெளிப்பட்டு மற்றைய கலங்களை அடைவதால் அக்கலங்களின் சக்திக்கு உபயோகமாகின்றன. குளுக்கோசு கிளைக்கோ பகுப்பு மூலமும், திரிகாபோலில் அமில வட்டத்தினூடும் (T.C.A. CYCLE) படிப்படியாக உடைக்கப்படும் பொழுது சக்தி பிறக்கின்றது,

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் இப்படிப் படிப்படியாக சிறு மூலக்கூறுகளாகும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் பெறப்படும் சக்தி மிகவும் பயனளிக்கக் கூடிய விதத்தில் ATP யின் உயர் சக்திப் பிணைப்புகளில் உள்ளடக்கப் படுகின்றன. அப்படியில்லாமல் குளுக்கோசு நேரடியாக சக்தியாக மாறும் பொழுது அதிலிருந்து வெளிப்படும் சக்தியில் பெருமளவு விரயமாகின்றது. எனினும் எம் கலங்கள் குளுக்கோசிலிருக்கும் 40 வீத சக்தியை மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. மிகுதி வீணாகிப் போகின்றது. ஒரு குளுக்கோசு மூலக் கூறிலிருந்து 38 ATP மூலக் கூறுகள் பெறப்படுகின்றன. இவற்றுள் அடங்கியிருக்கும் சக்தி 38 X 7 கி. கலரிகளாகும்.

**இரா. சிவகணேசன்**
*B. V. Sc (Cey) Ph. (U K)*

# குறைவிருத்தியும் அதன் சில பரிமாணங்களும்

- எம். எஸ். மூக்கையா -
சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல் பகுதி,
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

உலக நாடுகள் அவற்றின் பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சி நிலைமைகளின் அடிப்படையில் வேறுபடுகின்றன. பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அவற்றிடையேயான இடைவெளியினை உலகில் 1991 ஆம் ஆண்டில் ஆகக் கூடிய தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தியாக 33,610 அமெரிக்க டொலரை கொண்டிருந்த சுவிர்சலாந்தினையும் அதே வருடம் 80 அமெரிக்க டொலரையே தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தியாக கொண்டிருந்த மொசாம்பிக்கினையும் ஒப்பிட்டு பார்க்கும் போது விளங்கிக் கொள்ள முடிகிறது. (1) 1892 ஆம் ஆண்டளவில் சராசரி இந்திய பிரசை ஐரோப்பிய நாட்டினரை விட அரைப்பங்கு வருமானத்தினையே கொண்டிருந்த நிலைமை 1940 ஆம் ஆண்டளவில் மாறி, இந்தியரின் வருமானம் 1/40 பங்காக குறைந்ததோடு இன்று ஏறத்தாள 1/70 பங்காக குறைந்து விட்டது. (2) கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் நாடுகளிடையே வேறுபாடுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. எனவே நாடுகளிடையே அபிவிருத்தியில் பலத்த வேறுபட்ட நிலைமைகள் காணப்படுகின்ற இன்றைய நிலைமைகள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஒரு பிரதான விளைவாகும். குறைவிருத்தி நாடுகளின் பிரதான குணாதிசயங்களை நுணுக்கமாக கவனிக்கும் பட்சத்தில் இத்தகைய இடைவெளிக்கான காரணங்களை விளங்கிக் கொள்வது இலகுவாக இருக்கும்.

மூலவளங்களினை நன்கு விருத்தி செய்து பயனடையாமையினால் ஏற்படும் ஒரு விளைவே குறைவிருத்தி நிலையாகும். ஒரு நாட்டின் மூலவளங்களை சிறந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி போதிய பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருந்தால் அந்நாடு அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக காணப்படலாம். மூலவளங்களில் மனித வளம், இயற்கை மூலவளங்கள் என்பன முக்கியமானவை. எனவே மூலவளங்களின் அபிவிருத்தியின்மையே குறைவிருத்தியின் உள்ளார்ந்த பண்பு எனலாம். இத்தகைய பண்பே குறைவிருத்தி நாடுகளின் பலவீனத்திற்கும் காரணம் எனலாம். அந்நாடுகளின் பிரதான இயல்புகளை இனங்காண வேண்டுமானால் அவை பற்றி விபரமாக அவதானிக்க வேண்டும். இன்றைய குறை

(1) World Bank, **WORLD DEVELOPMENT REPORT**, (1993), (Oxford Press), (London), p.238 - 239

(2) Richard Sandbrook, EARTH SUMMIT '92 (UNCED), "From Stockholm to Rio" (London), (1993), p.16

விருத்தி நாடுகள் யாவற்றினையும் எடுத்துப் பார்த்தால் பெரும்பாலானவை அவற்றின் வரலாறு புவியியல், சமூக அமைப்பு, மரபுகள் என்பனவற்றில் ஒன்றிலிருந்து மற்றொன்று மாறுபட்டே காணப்படுகின்றது. எனவே குறைவிருத்தி நாடுகள் எண்ணிக்கையில் அதிகளவினதாகவும் வேறுபட்ட வடிவங்களை கொண்டனவாகவும் காணப்படுகின்றன. (3) இதனால் சில அடிப்படையானதும், அதே நேரத்தில் பொதுவாக காணப்படும் பண்புகள் மீது கவனம் செலுத்தி பார்க்க வேண்டியுள்ளது. அத்தகைய பொதுப் பண்புகள் பின்வருவனவாகும்.

அ) பொருளாதாரத்தில் பின்தங்கி காணப்படுவதுடன் தொடர்பான பிரச்சனைகள்.

ஆ) நிருவன ரீதியாக பிரச்சனைகள்.

இ) பொருளாதாரங்களின் இரட்டைத் தன்மை காரணமாக ஏற்படும் பிரச்சனைகள்.

(அ) குறைவிருத்தி நாடுகளின் பொதுவானதும் அதே நேரத்தில் மிகமுக்கியமானதுமான பிரச்சனை அவை பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிக் காணப்படுகின்றமையாகும். அவ்வாறு பின் தங்கிய பொருளாதாரத்தினை பின்வரும் நிலைமைகளின் அடிப்படையில் இனங்காண முடிகிறது.

(1) தாழ் வருமானம் (2) பொருளாதாரத்தில் விவசாய நடவடிக்கைகள் முன்னணி வகித்தல் (3) அந்நாடுகளின் ஏற்றுமதியில் முதனிலைப் பொருட்களே முன்னணி வகித்தல் (4) போதியளவு முதலீடின்மையும் பின்தங்கிய தொழில் நுட்பங்களும் 5) எழுத்தறிவின்மையும் தொழில் பயிற்சி பற்றாக் குறையும் (6) கூடிய குடித்தொகை காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கம் (7) குறை தொழிலும் தொழிலின்மையும்.

மேற்கூறிய நிலைமைகள் எவ்வாறு ஒரு நாட்டில் காணப்படுகின்றன என்பதுடன் தொடர்பாகவே அந்நாட்டின் வளர்ச்சியும் காணப்படுகிறது. இந்நிலைமைகளின் இயல்புகளை நன்கு விளங்கிக் கொள்ள அவை ஒவ்வொன்றினை பற்றியும் சிறிது விளக்கமாக அறிந்து கொள்வது பயனுடையதாக அமையும்.

தாழ் வருமானம்:-

குறைவிருத்தி நாடுகள் அனைத்திலும் காணப்படும் பிரதான குறைபாடு அங்கு காணப்படும் வறுமையாகும். (4) தாழ் வருமானம் இதனை எடுத்துக் காட்டுவதாயிருந்த போதிலும் பெரும்பான்மையான மக்களது துயர் நிலையினை இது போதியளவுவில் விளக்குவதாக இல்லை. ஏனெனில் சராசரி வருவாய், தனிநபர் வருவாய், என்பன செல்வந்தர்களுடைய வருமானத்தினையும் உள்ளடக்கியிருப்பதாகும். செல்வந்த வகுப்பினரது வருமானத்தை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் வறுமையானவர்களுடைய சராசரி வருமானமானது இப்போதைய சராசரி வருமானத்தை விடவும் மிகவும் குறைந்ததாகவே காணப்படும். நாடுகளில் காணப்படும் தவறான வருமான பரம்பல் முறை காரணமாக பெரும்பாலானோருடைய வருமானமானது குறைந்த சராசரி வருமானத்தை விடவும் குறைந்ததாகவே காணப்படும். அவர்கள் வறுமை கோட்டிற்கும் கிழான நிராதரவானவர்கள்.

இந்நாடுகளில் உள்ள வருமானத்தின் தாழ் நிலையினை விருத்தி பெற்ற நாடுகளில் காணப்படும் உயர் வருமானங்களு

(3) Agrawal, A. N, INDIAN ECONOMICS, (New Delhi), (1988), p.3

(4) Ibid p.5

டன் ஒப்பிடுவதனால் இவற்றின் வறுமை நிலையினை உணர முடிகிறது. செல்வந்தர்களுடைய சுபீட்சமான நிலைமையுடன் வறுமையானவர்களின் பின்தங்கிய நிலைமையினை ஒப்பிட்டு பார்க்கும் போது அவர்களுடைய மோசமான நிலையினை அறிய முடிகிறது. உதாரணமாக வருமானம் பற்றிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது குறைவிருத்தி நாடுகளின் ஒப்புமையான நிலைமை மிகவும் தாழ்ந்ததாகக் காணப்படும். 1991 ஆம் ஆண்டில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி, சுவிட்சர்லாந்தில் 33,610 அமெரிக்க டொலராகவும் யப்பானில் 26,930 டொலரர்கவும் ஐக்கிய அமெரிக்காவில் 22,240 டொலராகவும் பிரித்தானியாவில் 16,550 டொலராகவும், நெதர்லாந்தில் 18,780 டொலராகவும் இருந்த போது கென்யா, மத்திய கிழக்காபிரிக்க நாடுகள், தெற்காசியா நாடுகளில் அது 400 டொலருக்கும் குறைவாகவே காணப்பட்டது. (5)

பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் வாழும் பெரும்பாலான மக்களது பௌதிக வாழ்க்கை தரங்கள் மிகவும் கீழ் நிலையிலேயே உள்ளன. இங்குள்ள மக்கள் சாதாரண சௌகரியமான வாழ்க்கையினை எதிர்பார்த்து கனவு காணவும் தகுதியற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுடைய பிரதான உணவு தரம் குறைந்த தானிய வகைகளான ஜோவார், பாஜ்ரா போன்றனவாகவே காணப்படுகின்றன. விருத்தியுற்ற நாடுகளில் உள்ள மக்களது உணவில் தானியங்களின் முக்கியத்துவம் குறைந்து சரிவிகித உணவுக்கு தேவையான அளவில் மாத்திரம் அவை இடம் பெறுவதுடன், பால். பழங்கள், இறைச்சி வகைகள், சீனி போன்ற ஏனைய சத்துணவு வகைகளே முக்கிய இடம் பெறுகின்றன. வறுமையான மக்களது வருவாயில் பெரும் பங்கானது அத்தியாவசிய தேவைகளுக்காகவே செலவிடப்பட வேண்டியிருப்பதால் சுகாதாரம், கல்வி கலாசார வளர்ச்சி என்பவற்றிற்கு சிறிதளவோ, அல்லது முற்று முழுதாகவே செலவழிக்க முடியாதவர்களாகவோ காணப்படுகின்றனர். (6) அதே நேரத்தில் அரசாங்கங்களும் இந்நாடுகளில் தமது மக்களுக்கு அவ்வசதிகளை எல்லோருக்கும் முழுமையாக தேவையான அளவுக்கு செலவிட முடியாத வகையில் மூலதன வாய்ப்பின்றி காணப்படுகின்றன. (7)

எனவே இந்நாடுகளில் உடல் ஆரோக்கிய ரீதியாக தகுதியானவர்களும் திறமை மிக்கவர்களும் மிகச் சிலராகவே உள்ளனர். பெரும்பான்மையினர் நோய்வாய்ப்பட்டவர்களாகவும், கல்வியறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தகைய பின்னணியில் இவர்களில் வெகு சிலரே கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடவும் அவற்றினை அனுபவிக்கவும் தகுதி வாய்ந்தவர்களாக உள்ளனர். வறுமை காரணமாக இந்நாடுகளின் பௌதீக வளங்கள் பாதிக்கப்படுவதுடன் அதன் விளைவாக மக்களது வாழ்க்கைத் தரம் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றது.

(5) World Bank, WORLD DEVELOPMENT REPORT - 1993, (Oxford Press), (London), p.238 - 239.

(6) Sankaran, INDIAN ECONOMY - Problems Policies and Development, (Madras), (1981) p 338

(7) Gamini Corea, "Privatisation of state enterprises", ECONOMIC REVIEW, (Feb/March 1988), (Colombo), p 5

(8) Regnar Nurkse, PROBLEMS OF CAPITAL FORMATION IN UNDER DEVELOPED COUNTRIES, (1974), (Tamil Translation), (Colombo) 78 - 86.

இந்நாடுகளில் ஒரு புறத்தில் வறுமை தீவிரமாக காணப்படுகின்ற அதே வேளையில் அந்நாடுகளில் உள்ள மூலவளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாது காணப்படுகின்றமை இன்னுமோர் குறைபாடாக உள்ளது. (9) அந்நாடுகளில் இனங்காணப்பட்ட மூலவளங்கள் கூட இன்னும் முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை. இந்நாடுகளில் நிலவுரிமை. நிலப் பயன்பாட்டு முறைகள் என்பன திறமையாக செயற்படுவதில்லை மக்கள் தொகை விரைவாகப் பெருகிச் செல்வதால் நிலம் - மனித விகிதாசாரம் சார்பற்ற நிலமையில் காணப்படுகின்றது. அது மாத்திரமன்றி விருத்தியுற்ற அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நிலமை இன்னும் விபரீதமாகத் தோன்றும். சில நாடுகளில், ஒரு சில பிரதேசங்களில் நிலம் செறிவாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை உச்சப் பயன்பாட்டிற்கு இன்னும் கொண்டு வரப்படவில்லை. இதனால் நிலத்தின் உற்பத்தித் திறன் தொடர்ந்தும் தாழ் நிலையிலேயே காணப்படுகின்றது. குறைவிருத்தி நாடுகளினதும் அதே நேரத்தில் அண்மையில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளினும் ஹெக்டருக்குரிய நெல்லுற்பத்தியினை ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வேறுபாடுகள் விளங்கிக் கொள்ளலாம். (10)

| நாடு | ஹெக்டயருக்குரிய நெல் லுற்பத்தி (கிலோவில்) |
|---|---|
| காம்போடியா | 1,111 |
| நேபாளம் | 2,514 |
| இலங்கை | 3,452 |
| தென் கொரியா | 6,463 |

இவை மாத்திரமின்றி இந்நாடுகளில் உள்ள நீர், காட்டுவளம், மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மூலவளங்கள் பற்றி அறிவியல் ரீதியான அளவீடுகளும், மதிப்பீடுகளும் போதியளவில் இல்லை. (11) புதிய மூலவளங்களை கண்டுப்பிடிக்கவோ, அறியப்பெற்றுள்ள மூலவளங்கள் காணப்படும் புதிய இடங்களை கண்டு பிடிக்கவோ அல்லது தற்போது பயன்பாட்டிலுள்ள மூலவளங்களின் பயன்பாட்டைச் சிக்கனப் படுத்தவோ போதியளவுக்கு, தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதோ மிகக் குறைவு. (12)

(9) Ibid p.64

(10) Central Bank of Sri Lanka, ECONOMIC and SOCIAL STATISTICS of SRI LANKA, (Colombo), (1992), p.19.

(11) Hodder. B. W. "Natural Resources and Tropical Development"; DEVELOPING THE UNDEVELOPED COUNTRIES ed. Alan B. Mountsoy, (1971), (Bristol), p. 70 - 71.

(12) Ibid p. 209 - 223

( தொடர்ச்சி அடுத்த மாத இதழில் )

# புவியின் உட்பாகமும் அதன் பௌதீக இரசாயனத் தொழிற்பாடுகளும் - பகுதி 3

– வை. நந்தகுமார் எம். ஏ (இலங்கை) எம். எஸ். ஸி. (யப்பான்) –
முதுநிலை விரிவுரையாளர், புவியியற்றுறை.

புவியின் உட்பாகம் பற்றிய நேரடியான தகவல்கள் பெறுவதென்பது கடினமான காரியமாகும். புவியில் ஏற்படுத்தப்படும் ஆழமான துளையீடுகளின் தானும் 8 km. வரையினதாகவே அமைகின்றது. இதனை புவியின் ஆரத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது 800/1 பங்காகவே இருக்கின்றது. எரிமலைப் பாறைகள் புவியின் உட்பாகத்தின் 18 km. தூரம் வரையான பகுதியின் பாறைகளின் பௌதீக இரசாயனச் சேர்க்கைகளை ஓரளவு உணர்த்துவனவாக உள்ளன. மேலும் ஆழமான சமுத்திரப் படுக்கைகளில் காணப்படும் எரிமலைக் குழம்புப் பாறைகள் (லாவாப் படிவுகள்) புவி மேற்பரப்பில் இருந்து 10 km. வரையான பாறைகளின் சேர்க்கைகள் பற்றிய தகவல்களை அறிவதற்கே ஏதுவாகின்றன.

புவியின் உட்பாகம் பற்றிய ஆரம்ப ஆய்வுகள், பாறைகளின் அடர்த்தியின் அடிப்படையிலேயே காணப்படுகின்றன. 1798 இல் ஹென்றி கவண்டிஷ் (Henry Carvendish) புவியின் முழுப் பாகத்தினதும் அடர்த்தியை 5.48 எனக் குறிப்பிட்டார். இவ்வளவானது இன்றைய கணிப்பீடுகளான 5.52 என்ற அளவில் இருந்தும் சிறிதளவே வேறுபடுகின்றது. புவி வெளியோட்டின் (outer crust) சராசரி அடர்த்தி 2.75 ஆகும். புவியின் மையப் பகுதியின் அடர்த்தியானது 8 இலும் அதிகமாக அமையும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதனால் புவியின் மையப் பகுதி இரும்பு போன்ற கடினமான உலோகத்தால் ஆனது எனக் கருதப்படுகின்றது. மேற்பரப்பின் சராசரி அடர்த்தியானது சாதாரணமான சராசரி அமுக்கத்தினையும் வெப்பத்தினையும் கொண்டுள்ளவிடத்து 7.9 தாக அமையுமெனக் கருதப்படுகின்றது. மையப் பகுதியின் இரும்புப் படிவுகள் அல்லது இரும்புச் சேர்க்கையானது நிரந்தரமான காந்தத் தன்மையைப் பெற்றிருப்பதாலேயே புவியில் காந்த வலயம் காணப்படுகின்றது என்ற கருத்து நிலவியது. எனினும் பிற்பட்ட காலத்தில் புவியின் உட்பாகத்தில் இடம் பெற்றுக் காணப்படும் உயர் வெப்ப நிலைத் தன்மையால் இக்கருத்து வலுவிழந்து அதாவது புவியின் உட்பாக வெப்பநிலை 36 மீற்றருக்கு 1 பாகை சென்ரி கிரேட் என்ற முறையில் வீழ்ச்சியடைந்து செல்வதனால் 18 km. இலும் மேற்பட்ட ஆழத்தில் காந்தத் தன்மை அற்று காணப்படும் எனக் கருதப்படுகின்றது.

புவிச்சரிதைவியலாளர் எட்வாட் சுயஸ் (Edvard Suess 1831 - 1914) பாறைகளின் அடர்த்தி பற்றிய விளக்கமான கருத்துக்களை முன் வைத்தார். இவர் பாறைகளின் கனிப் பொருட் சேர்க்கைகளின் அடிப்படையில் புவியின் உட்பாகத்தை, புவியோடு, இடையோடு, கோளவகம் என மூன்று வலயகங்களாகப் பிரித்து விளக்கியுள்ளார். புவியின் அதி உட்பகுதியான கோளவகம் உலோகத்தால் ஆனது, அதன் அடர்த்தி 8 வரையினது என்றும் இப்பகுதியில் நிக்கலும்

(Nickel) இரும்பும் (Ferrum) அதிகளவில் இருப்பதால் இதனை "நைப்" (Nife) என்றும் குறிப்பிட்டார். புவியோட்டிற்கும் புவியின் உட்பாகத்திற்கும் இடைப்பட்ட வலயத்தினை "இடையோடு" எனக் குறிப்பிட்டு, இப்பகுதியில் அதிகளவு சிலிக்கேட்டும் (Silicates) மக்னீசியமும் (Magnesium) காணப்படுவதனால் இதனை "சிமா" (Sima) என்றும் அதன் அடர்த்தியை 3.4 எனவும் குறிப்பிட்டார். புவியோட்டின் அடர்த்தி 2.7 என்றும் இதில் அதிகளவு சிலிக்கேற்றும், (Silicates) அலுமினியமும் (Aluminium) இடம்பெறுவதனால் இதனை "சியல்" (Sial) எனவும் குறிப்பிட்டார்.

புவியோடு:-

புவியின் மேற்படையே புவியோடு ஆகும். இது கடினமான கற்கோளமாகக் காணப்படுகிறது. இப்புவியோடு 16 km ரிலிருந்து 64 km கள் வரை காணப்படுகிறது. புவியின் விட்டத்துடன் ஒப்பிடும் போது இது எவ்வளவோ சிறியதாக உள்ளது. புவியோடு பளிங்குருப் பாறைகளையும் அவற்றை மூடிய அடையற் பாறைகளையும் கொண்டிருக்கின்றது. புவியோட்டின் மேற்படை 'சியல்படை' எனப்படும். இவை அதிகளவில் சிலிக்காவையும் அலுமினியத்தையும் கொண்டுள்ளது.

புவியோட்டின் கீழ்ப்படையைச் சிமாப் படை (Sima) எனப்படும். இப்படை சியலிற் காணப்படுவதிலும் குறைந்த விகித சமமான சிலிக்காச் சேர்வைகளாலும் மக்னீசியச்சேர்வைகளாலும் இணைந்ததாகக் காணப்படுகிறது. இவை சில வேளைகளில் எரிமலைக் குழம்புப் பாறையாக விளங்குகின்றன. புவியின் ஆழம் கூடக்கூட இப்பாறைகளின் அடர்த்தியும் கூடும். இவ்வடர்த்தி படிப்படியாகக் கூடாது வெவ்வேறான அடர்த்திகளுள்ள பாறைகளின் ஒரு மைய வட்ட வோட்டுக் குறையாகக் கூடுகின்றது.

புவியோட்டின் தடிப்பமானது கண்டத்திலும், சமுத்திரத்திலும் வேறுபட்டுக் காணப்படுகிறது. புவியோட்டில் 65% சமுத்திரத்திற்குரிய ஓடும், 35% கண்டத்திற்குரிய ஓடும் காணப்படுகிறது. சமுத்திரத்திற்குரிய ஓட்டின் சராசரித் தடிப்பம் 8 கி. மீ. ஆகும். கண்டத்திற்குரிய ஓட்டின் சராசரித் தடிப்பம் 35 km ஆகும். ஆனால் இவ்வளவு 17 km - 50 km வரை மாறுபடுகிறது.

( தொடர்ச்சி அடுத்த மாத இதழில் ...... )

## எட்டாவது தமிழாராச்சி மாநாடு

எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1995ம் ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் 5ம் திகதி வரை தமிழ் நாடு தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டிற் கலந்து கொள்ள எழுபதுக்கும் மேற்பட்ட இலங்கை அறிஞர்கள் அழைக்கப் பட்டுள்ளனர்.

இம் மாநாட்டின் ஆய்வுக்கட்டுரைகள் படிக்க விரும்புவோர்;

பேராசிரியர், டாக்டர். எஸ். இராஜாராம் தலைவர், மொழியியற் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 613005, தமிழ் நாடு, என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

நன்றி,

– கோபுரம்

( இந்து சமய கலாசார திணைக்கள வெளியீடு )

# பாராட்டு பெற்றோர்

24 - 07 - 1994 ந் திகதி பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் நடைபெற்ற ஊவா மாகாண சாகித்திய விழாவில் இடம் பெற்ற கல்வித்துறைக்குச் சேவையாற்றியவர்களுக்கான பாராட்டு விழாவில் இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் எம். பி. பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். கௌரவிக்கப்பட்டவர்கள் வருமாறு;-

★ **பாரதி க. இராமசாமி**
பாரதி கல்லூரியின் நிறுவனர் - பதுளை.

★ **பேராசிரியர் எஸ். சின்னத்தம்பி**
பல்கலைக் கழகம் - பேராதனை.

★ **பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
பல்கலைக் கழகம் - கொழும்பு.

★ **முதுநிலை விரிவுரையாளர் எம். எஸ். மூக்கையா**
பல்கலைக் கழகம் - பேராதனை.

★ **முதுநிலை விரிவுரையாளர் இரா. சிவகணேசன்**
பல்கலைக் கழகம் - பேராதனை.

★ **விரிவுரையாளர் எஸ். விஜயசந்திரன்**
பல்கலைக் கழகம் - பேராதனை.

★ **விரிவுரையாளர் ஆர். சோபனாதேவி**
பல்கலைக் கழகம் - பேராதனை.

இலக்கியத்துறைக்கும், பத்திரிகைத் துறைக்கும் பங்கு பற்றியவர்களுக்கு அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். கௌரவிக்கப்பட்டவர்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ★ எழுத்தாளர் | நயீமாசித்திக் | - | அப்புத்தளை; |
| ★ மொழியாக்கம் | சுந்தரம் சௌமியன் | - | பதுளை. |
| ★ பத்திரிகையாளர் | லீலா இராமையா | - | கொழும்பு. |
| ★ பத்திரிகை நிருபர் | சோர்தீன் (ச. நீ.) | - | பண்டாரவளை. |
| ★ பத்திரிகை நிருபர் | எஸ். சந்திரசேகரன் | - | பதுளை. |
| ★ பாடகர் | 'கலைமாமணி' டி. எம். சௌந்தரராஜன் | | |

நாடகக் கலைஞர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்கள் கௌரவிக்கப்பட்டவர்கள் வருமாறு:-

✠ கலைஞர் க. பாலேசுவரன் ஆசிரியர் - பதுளை
✠ ,, ஆர். இராசேந்திரன் ஆசிரியர் - பண்டாரவளை
✠ ,, மோகனதாஸ் - அப்புத்தளை.
✠ ,, கே. குருதேவன் கோணக்கலை - பசறை.

# தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் அன்பு மொழிகள்

"உனக்கு வாழ்வில் அமைதி வேண்டுமானால், பிறரது குற்றங்களைப் பார்க்காதே. பார்த்தே தீரவேண்டுமானால் உன் குற்றங்களையே பார், இந்த உலகம் முழுவதையுமே உனது சொந்தமாக்கக் கற்றுக் கொள். இந்த உலகில் யாரும் அந்நியர் இல்லை. இந்த உலகம் முழுவதும் உனது சொந்தமே!" இது அன்னையின் இறுதி போதனை.

கடவுளின் தாய்மை எப்படிப்பட்டது என்பதை நடைமுறையில் வாழ்ந்து காட்டுவதற்காகவே குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், அன்னை சாரதாதேவியை உலகில் விட்டுச் சென்றதாக கூறப்படுகிறது. பெண் எனும் தத்துவத்திற்கு இலக்கணமாக, ஸ்ரீ இராமரின் சீதை வாழ்ந்தாள். அத்தகைய அவதார புருஷர்களைப் போலன்றி, ஏழையான, ஆனால் பண்பட்ட அந்தணக் குடும்பத்தில் பிறந்த சாரதை, மற்றைய நாட்டுப்புறக் குழந்தைகளைப் போலவே, ஆடுமாடுகளை கவனித்தும், இளைய சகோதரர்களைப் பேணியும் மிகச் சாதாரண வாழ்க்கையில் இளமையில் காணப்பட்டார். பள்ளி சென்று படிக்காமலேயே பிற்காலத்தில் குருதேவரின் ஆன்மீக வாழ்விற்கு ஈடு கொடுக்கும் வகையில் பொறுமையாக, தன்னல அடக்கமாக, பரந்த அன்பினால் யாவரையும் தனது கட்டுக்குள் வைத்திருந்தார் சாரதா தேவியார். அமைதியும், பண்பும், ஆன்மீகமும் நிறைந்த இவரது வாழ்வில் உபதேசம் என்றோ, பிரசங்கித்த செய்தியென்றோ எதுவும் இல்லை. அவரது வாழ்வே உபதேசம். அவர் வாழ்ந்த முறையே நமக்கு செய்தியாக இருக்கிறது.

சாரதா தேவியார், ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மனைவி என்பதை விட, அவரின் முதற் சிஷ்யையாக, உலகத்தோருக்கு தாயாக, சுவாமி விவேகானந்தர் போன்ற துறவிகளுக்கே வழிகாட்டியாக வாழ்ந்தார் ஆம்! "ஒரு துறவியை மணந்து கொண்டதால், 'அம்மா' என குழந்தைகள் அழைக்கும் போது ஏற்படும் இன்பத்தை அறிய முடியாது போய்விட்டாள்" என தாயார் சியாமாசுந்தரி வருந்திய போது, குருதேவர் பகன்ற மொழி இன்று எவ்வளவு தூரம் நிதர்சனமாகி உள்ளது.

"சாரதைக்கு எண்ணற்ற குழந்தைகள் கிடைக்கப் போகிறார்கள்! அவள் சலித்துப் போகுமளவிற்கு, இரவு பகலாக அம்மா! அம்மா! என்று குழந்தைகள் இடைவிடாது அழைக்கப் போகின்றனர்" என்றார் குருதேவர்.

மக்களிடையே ஞானத்தையும், பக்தியையும் பரப்பரிந்த ஓர் அவதார புருஷரின் துணைவி, எண்ணற்ற ஆன்மீகக் குழந்தைகளுக்கு தாயானாள். ஆனால் குருதேவர் உலகையாளும் அகிலாண்டநாயகியின் வடிவில் அன்னையைப் போற்றினார். தட்சிணேசுவரம் அம்பிகைக்குரிய பீடத்தில், சாரதா தேவியை அமர்த்தி, காளி பூஜையன்று, ஷோடசி பூஜை செய்யுமளவிற்கு அன்னை தூய்மையில் உயர்ந்து நின்றார். இந்த பூஜை மூலம் இருவரும் இல்லறத்தைக் கடந்த, அதீத நிலையில் உண்மை - அறிவு - இன்ப நிலையில் நிலைத்திருந்தனர். இவ்வாறாக பரபிரம்மத்தில் ஒன்றிய நிலை ஆழ்ந்த சமாதிக்கு ஒத்திருந்தது,

இத்தகைய ஆன்மீக அனுபவங்களை அன்னை தனது சீடர்களுடனும், பக்தர்களுடனும் நிகழ்த்திய உரையாடல்களே தற்போது எமக்கு கிடைத்துள்ள அன்பு மொழிகள். அதே உரையாடல்கள் மூலம் தான் நாம் அன்னையை முழுமையாக புரிந்து கொள்ளச் செய்வதுடன், நம்மை உயர்வடையச் செய்யும் இணையற்ற சக்தி வாய்ந்தவையாக உள்ளன,

— சத்தியமணி

# வாசகர் நெஞ்சங்களிலிருந்து.....

மதிப்பிற்குரிய அகிலம் ஆசிரியருக்கு,

அகிலம் முதல் இதழ்

அகிலம் முதல் இதழை யாழ், பொது நூலகத்தில் இன்று பார்வையிடும் பேறு கிடைத்தது. இலங்கையின் முதல் தர இதழ் என்பதை இலகுவாக விளங்கிக் கொள்ள முடிந்தது. எதிர் வரும் காலங்களில் வெளிவர இருக்கும் இதழ்கள் மூலம் அகிலமெல்லாம் வேர்விட்டிருக்கும் தமிழ் இலக்கிய வாசகர்களிடையே முதலிடம் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

எனது அயலூரவரும் எனது 70 உ. த. ப. இ வழிகாட்டியுமான குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தின் ஆக்க பூர்வமான கட்டுரை பயனுள்ளது. அடுத்து வரும் இதழ்களில் அவர் மூலம் ஒவ்வொரு நாட்டு தமிழரையும் அவர் நிலையையும் அகிலம் மூலம் அகிலத்திற்கு காட்ட வேண்டும் என்று பணிவன்பாக வேண்டுகிறேன்.

இன்று தமிழகத்தில் பிரபலம் பெற்றிருக்கும் ''குமுதம்'' ஆரம்ப காலத்தில் அதன் ஆசிரியர் திரு. P. V. பார்த்தசாரதிக்கு எவ்வளவோ நட்டங்களையும் கஸ்டங்களையும் சோதனைகளையும் கொடுத்தது. அதனை அவர், சகித்ததன் மூலம் அது சாதனை படைத்திருக்கிறது. அதே போல் அகிலமும் சாதனை செய்வதில் மனம் தளராது தொடர்வதில் தான் வெற்றி தங்கியுள்ளது.

தொடர்ந்து முயன்றால் தமிழுலகில் பன்னாட்டு இதழாக மலரும் வாய்ப்பு அகிலத்திற்கு உண்டு என வாழ்த்துகிறேன்.

அன்புடன்,
வளவாய்: வ. கந்தசாமி

★

அகிலம் இரண்டாவது இதழை வாசித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அகிலம் மிகவும் அருமையான கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி வந்துள்ளது, எல்லா கட்டுரைகளும், கவிதைகளும், சிறப்பாகவும் எமது அறிவு வளர்ச்சியடைவதற்கு உகந்ததாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் படிப்பினையூட்டும் சிறுகதையை '' கண்ணிழந்தபின்... '' என்ற தலைப்பில் ந. பார்த்தீபன் அவர்கள் எழுதியிருப்பது அகிலத்தை மேலும் சிறப்பிக்கின்றது. தொடர்ந்து வரும் அகிலம் இதழில் ந. பார்த்தீபன் அவர்கள் சிறுகதைகளைத் தந்து எம் போன்ற வாசகர்களுக்கு புத்துணர்ச்சி கொடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

ச. சுலோஜினி
யாழ்ப்பாணம்

அகிலம் இரண்டாவது இதழில் வெளியான தமிழோவியனின் கட்டுரை பற்றி எனது கருத்து. இதனை அக்கட்டுரையின் மறுபக்கமாக மட்டும் எண்ணிவிட வேண்டாம் ஏனெனில் மலையக மாணவர் உலகில் நடந்து கொண்டிருப்பதை அவரின் எழுத்தில் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அந்த மாணவர்களுக்கு அறிவியற் கல்வியறிவு கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை, இந்த நேரம் அகில இலங்கையும் பெருமை கொள்ளும் விதமாக, கொழும்பு, கண்டி போன்ற நகரங்களுக்குப் போட்டியாக, கல்விமான்களையும் பேரறிஞர்களையும் உருவாக்கித்தந்த யாழ்நகரை நினைக்கும் போது, என்னவென்று சொல்ல முடியாத வேதனை நம்மவரில் பலருக்குண்டு.

கணக்கியல் - மின்னியல் இவற்றிற்கு ஆதாரம் மின்சாரம். மூலப்பொருள் இன்றி, கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக யாழ்நகர் இருண்ட பிரதேசமாக விளங்குகிறது.

இதே நிலைமை மேன்மேலும் தொடருமேயானால் உருவாகிக் கொண்டிருக்கும் பிஞ்சுகளின் இளைய தலைமுறையின் எதிர்காலம் நம்மை யோசிக்க வைக்கிறது. மின்சாரம் என்றால் என்ன? அதன் பலாபலன்கள் என்ன? அதனால் உலகில் அறிவியலும், தொழில் வளர்ச்சியும் எங்ஙனம் முன்னேறுகிறது? எதுவுமே ஏட்டில் படித்து அறிந்து கொள்ளலாம், இதில் தவறில்லை. செயன்முறை அனுபவம் இன்றி ஏட்டுப்படிப்பு ஒரு போதும் மாணவ உலகில் வளர்ச்சியை தந்துவிட முடியாது என்பது கண்கூடு.

- "சத்தியம்"

✶

அகிலம் இதழ் 2 ஐ சுவைத்தேன். மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை! கலை, இலக்கியம் அறிவியல் மலையக மண்வாசனையும் நன்று! ஆற்றல் மிக்க மலையக படைப்பாளிகளின் தோற்றத்தைக் காட்டவேண்டும் "அகிலத்தில்"

முல்லை வேந்தன்
நாவல் நகர்

✶

அகிலம் கண்டோம்:
ஆனந்தம் கொண்டோம்.

தமிழ் வாழ வளர உருவாக்கப்பட்ட இந்த தமிழ்ச்சங்கம்
தமிழை வளர்க்க உருவான "அகிலம்"

மென் மேலும் சிறப்புப் பெற்று உயர, தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அளவில்லா மகிழ்ச்சி கொள்கிறது.

வாழ்க! வளர்க!!

அட்டன் - டிக்கோயா தமிழ்சங்கம்
அட்டன்

# அகிலாவின் கேள்வி-பதில்

கேள்வி;- அகிலம் இதழில் மாணவர்களுக்கென அறிவியல் போட்டியொன்றை ஆரம்பித்தால் என்ன?

வி. கோபிநாத்
கலகா.

பதில்:- அகிலத்தைத் தொடர்ந்து வாசியுங்கள். அதில் வரும் ஆக்கங்களைக் கொண்ட முற்றிலும் புதிய அறிவியல் போட்டியொன்றை மிக விரைவில் நடாத்த உத்தேசித்திருகின்றோம்.

கேள்வி:- அகிலத்தில் மாதர்களுக்கான தனிப்பகுதி பிரசுரிக்கப்படுமா?

எம். வசந்தா
நுவரெலியா.

பதில்:- மாதர்கள் தானே நிறைய எழுதிக்கொண்டிருக்கின்றார்கள் இருப்பினும் உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற சிறிது பொறுத்திருங்கள்.

கேள்வி:- பொருளாதாரம் என்பதைப் பிரித்துக் காட்டுங்கள்?

சி. மணிவண்ணன்
பேராதனை.

பதில்:- பொருள் + ஆதாரம் என்பது பழைமை. பொருள் + ஆ + தாரம் = பொருளாதாரம் என்பது புதுமை! பொருள் — பணம் ஆ — பசு தாரம் — மனைவி

கேள்வி:- கவியரசர் கண்ணதாசன் இயற்றிய திரைப்படப்பாடல்களில் தங்களுக்குப் பிடித்தது எது வென்று கூறமுடியுமா?

எஸ். ராஜலிங்கம்
மாத்தளை.

பதில்:- 'இல்லற ஜோதியில்' முதன் முதல் அவர் எழுதி பாடப்பெற்ற "சிறு விழி குறு நகை சுவை தரும் மழலையின் சொல்லே இசை தரும் வீணையே! என்ற பாடல் ஒவ்வொரு நாளும் நினைவுக்கு வருகின்றது.

கேள்வி:- பெண்களில் சிறந்தவள் என்று எப்படி தெரிந்து கொள்வது!

பி. சுகுமார்
பன்விலை.

பதில்:- நானும் ஒரு பெண் என்று தெரிந்தும் வம்புக்கு இழுக்கப் பார்க்கிறீர்களே! ஆயினும் பதில் சொல்ல வேண்டியது என் கடமையல்லவா? எந்த பெண்ணைப் பற்றி விமர்சனங்கள். அதாவது நல்லவள் என்றோ கெட்டவள் என்றோ தெரியாமல் இருக்கிறதோ அவளே சிறந்த பெண் என்பது அகிலாவின் அபிப்பிராயம்.

கேள்வி:- எங்கு சென்றாலும் நுளம்புத் தொல்லை தாங்க முடியவில்லை! தாங்க முடியவில்லையே!!

பி. ஆர். பசுபதி
நாவலப்பிட்டி

பதில்:- மன்னிக்கவும், கனம் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைக்க வேண்டிய கேள்வி இது!

கேள்வி:- செல்வத்தில் சிறந்த செல்வம் எது?

வை. சார்மிலா
புசல்லாவை

பதில்:- ''செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் - அச்செல்வம் செல் வத்து ளெல்லாம் தலை'' என் கிறார் தெய்வப் புலவர் திருவள் ளுவர்.

கேள்வி:- புலர்ந்த அகிலம் தனது முதல் மலர் மூலம் வாசகர் நெஞ்சங் களை வசீகரித்துக் கொண்டது. அகிலம் தாங்கி வந்த அத்தனை அம்சங்களும் மிகச்சுவை வாய்ந் தவையே! அதற்கு எனது நன்றிகள்! எனினும் அடுத்து வரும் அகிலத்தில் சிறுகதைக ளையும் புதுக்கவிதைகளையும் சேர்த்துக் கொண்டால் வளர்ந்து வரும் எழுத்தாளர் கவிஞர்களுக் குக் களம் அமைப்பதாக அமை யுமல்லவா? அதற்கான பதிலை எதிர்பார்க்கின்றேன்?

எச். எம். கலால்தீன்
(பெரிய கிண்ணியா)
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

பதில்:- 'அகிலம்' இரண்டாவது இதழில் தங்களது வேண்டுகோள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள் கின்றோம். சிறுகதையும் புதுக் கவிதையும் இரண்டாம் இதழில் வெளிவந்துள்ளன. தொடர்ந்தும் வெளிவரும்!

கேள்வி:- சிந்தித்து வாழத் தெரியாதவ னைப் பற்றி என்ன நினைக்கின் றீர்கள்? ( சிந்தித்துப் பதில் தரவும் )

எம். மசூத் அஹமத்
90, மத்திய வீதி,
காத்தான்குடி - 03

பதில்:- 'ஊதாரி' என்று முன்னோர் கூறிவைத்துள்ளார்கள். நாம் வேண்டுமென்றால் உதவாக்கறை என்று வைத்துக்கொள்ளலாம்.

கேள்வி:- கண்டி மாநகரின் மலையுச்சியில் வள்ளல் ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கிறாரே, அவர் பார்ப்பதன் அர்த்தந்தான் என்ன?

உலாவரும் கலா
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

பதில்:- தான் போதித்த போதனைக ளின் படி யாராவது கண்டி மாநகரில் உலா வந்து கொண்டி ருக்கிறார்களா? என்பதை உற்று அவதானித்துக் கொண்டிருக்கி றார் அந்த வள்ளல், நல்ல எதிர்பார்ப்பு தானே!

கேள்வி:- உலகத்திலேயே தலை சிறந்த சுறுசுறுப்பாகக் கருதப்படுவது விடியற் காலையில் தூக்கத்திலி ருந்து எழுவது தான். அதிகாலை யில் சீக்கிரம் எழுந்திருக்க உங் களின் ஆலோசனை என்ன?

பிரமிளா
கண்டி

பதில்:- இரவில் அளவோடு அத்தோடு நேரத்தோடு உணவை உட் கொண்டு, சிறிது நேரம் தியா னத்தில் ஈடுபட்டு மன அமைதி யுடன் படுக்கைக்குச் சென்றால் அதிகாலையிலேயே எழும்பிவிட லாம் மனப்பக்குவம் அவசியம். ஒரு வாரம் இப்படி பழகினால் பிறகு அதிகாலையில் எழும்புதல் இலகுவாகி விடும்.

பகவானுக்கும், பக்தனுக்கும்
பாலமாக அமைந்து அகில இலங்கைக்கும்
மணம் பரப்புவது

# பொபி பத்திகள்



# BOBBY INDUSTRIES (PVT.) LTD.

14, 1st Lane
Mawilmada,
KANDY.

TEL: 08-25363 FAX: 08-33348

மலையகத் தலைநகராம்
கண்டி மாநகரிலிருந்து
கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகையான

# அகிலம்

சிறந்த வெளியீடாக
அகிலமெல்லாம் பவனிவர
எமது நல்லாசிகள்

# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATHARANPOTHA
KUNDASALE

T'PHONE: 08-24217 - 32574

G D KANDY